V.2 No.12
De 1929

RB73ↄↄ2",N28
N29.2.12.
187138

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 2—No. 12.

ஓம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் உ | சுக்கில ஆண்டு மார்கழித் திங்கள் 1929 ஆம் டிசம்பர்மீ | இதழ் கஉ

| உள்ளுறை | | | பக்கம் |
|---|---|---|---|
| அரிமா நோக்கு | ... | ... | ... உகரு |
| நமது வன்மை | ... | ... | ... உகஎ |
| வேட்டுவனும் அப்புழு ... | | .. | ... உககூ |
| விபரீதவுரைத் தேற்றம் | | ... | ... உ௩௦ |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—கி. குப்புச்சாமி முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

1929

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவ சித்தாந்த மகா சமாஜம்

# 24-ம் ஆண்டு நிறை விழா

## சைவர் மகாநாடு, திருவெண்ணெய்நல்லூர்

"சித்தம் தெளிவீர்காள், அத்தன் ஆரூரை
பத்தி மலர்தூவ, முத்தி ஆகுமே"

**பேரன்புடையீர் !**

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் இருபத்து நான்காம் ஆண்டு நிறை விழாவும் அதையொட்டிய சைவர் மகாநாடும் **திருவெண்ணெய் நல்லூரில்**, திருப்பாதிரிப் புலியூர் உயர்திரு - ஞானியார் சுவாமிகள் என வழங்கும் **ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்** தலைமையில், நிகழும் சுக்கில ஆண்டு மார்கழித் திங்கள் ௪-ம் நாளுக்குச் சரியான 1929௵ டிசம்பர்௴ 18௳ புதன்கிழமை முதல் ஏழு நாட்கள் வரை அடியிற் காணும் முறைப்படி நடைபெறும். தாங்கள் தங்கள் சபையினரோடும் ஏனைய அன்பர்களோடும் வந்திருந்து ஆண்டு நிறை விழாவையும் மகா நாட்டையும் சிறப்பாக நடத்தி வைக்கும்படி வேண்டுகிறோம்.

இங்ஙனம் : தங்கள் அன்புள்ள,

| | |
|---|---|
| தி. நல்லசிவன் பிள்ளை, பி.ஏ., பி.எல்., | ம. பாலசுப்ரஹ்மண்யம், பி.ஏ., பி.எல்., |
| ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., | எம். சின்னசாமி ரெட்டியார், |
| உதவி சபைத் தலைவர்கள். | நிலச்சுவான், காரியதரிசிகள். |

## நிகழ்ச்சி முறை

### சுக்கில௵ மார்கழி௴ ௪௳ (18-12-1929) புதன்கிழமை

பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை—தேவாரம், கடவுள் வணக்கம், வரவேற்பு.

4 — 4.30 சென்னை அரசாங்கம் சுகாதார மந்திரியார் சைவத் திருவாளர் - கனம்- **S. முத்தையா முதலியார்** அவர்கள் ஆண்டு நிறை விழாவையும் மகாநாட்டையும் அன்புகூர்ந்து திறந்து வைப்பார்கள்.

4.30— 5 வந்தனோபசாரம், கடவுள் வாழ்த்து.

### சுக்கில௵ மார்கழி௴ ௫, ௬, ௭௳ (19, 20, 21-12-1929)

பிரதிநிதிகளுக்கு வாக்குரிமைச் சீட்டு வழங்குதல். சமாஜப் பணியாளர் கழகக் கூட்டம், மகாநாட்டு விஷயாலோசனைக் கூட்டம். ஆலய வழிபாடு.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சென்னை, சைவசித்தாந்த மகா சமாஜத்தின்
மாதத் தமிழ்ப் பத்திரிகை

மலர் இரண்டு

**1929**

பத்திராசிரியர் :

ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், பி. ஏ., பி. எல்.,
அட்வகேட், சென்னை.

உதவிப் பத்திராசிரியர்கள் :

வல்லை - பாலசுப்பிரமணியன், பி. ஏ.
(1-1-1929 முதல் 28-10-1929 வரை)

கி. குப்புச்சாமி முதலியார்,
(28-10-1929 முதல்)

சைவசித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை,
சென்னை.

## சித்தாந்தம் மலர் இரண்டின் உள்ளுறை


| | | |
|---|---|---|
| அரிமாநோக்கு ... | பத்திராசிரியர் | 293 |
| அறிக்கை ... | காரியதரிசி | 8 |
| அறிக்கைப் பத்திரம் ... | காரியதரிசி | 20 |
| அறுசமயப் பகுதி ... | அ. காளியப்ப பிள்ளை | 176 |
| அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திர உண்மை. | அ. மு. சரவண முதலியார் | 215, 224 |
| இதுவோ சுயமரியாதை ? ... | பத்திராசிரியர் | 108 |
| உடலும் உடையும் உண்மையும் தோற்றமும் ... | A. V. முத்தையா முதலியார் | 122 |
| உற்றார் யாருளர் ? ... | வேள் - N. துரைக்கண்ணன் | 69 |
| என்னிலும் இனியன் ... | திரு. வி. கலியாணசுந்தர முதலியார் | 14 |
| ஒரு பெண்மணியின் தினசரிக் குறிப்புப் புத்தகம் | வல்லை - பாலசுப்பிரமணியன் | 57 |
| ஔவை ... | S. P. Y. சுரேந்திரநாத் ஆரியா | 45 |
| காரிய நிருவாக சபை ... | காரியதரிசி | 25 |
| குரு பூசைச் சிறப்பு ... | திரு. வி. உலகநாத முதலியார் | 196 |
| குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை ... | R. M. அண்ணாமலை செட்டியார் | 40, 83, 187 |
| சங்க நூல்களும் சைவமும் ... | ந. மு. வேங்கடசாமி நாட்டார் | 116 |
| சமய இயக்கம் ... | காழி. சிவ. கண்ணுசாமி | 88 |
| சமய உணர்வும் ஆராய்ச்சி யறிவும் ... | காழி. சிவ. கண்ணுசாமி | 62 |
| சமயச் சீர்திருத்தம் ... | மறைமலையடிகள் | 101 |
| சமயத்தின் சாரம் ... | C. S. சுவாமிநாத முதலியார் | 29 |
| சமய வளர்ச்சி ... | பத்திராசிரியர் | 53 |
| சமாஜத்தின் 23-ம் ஆண்டு நிறைவிழா ... | காரியதரிசி | 3 |
| சிவஞான போதம் ... | அ. முத்தைய பிள்ளை | 269 |
| சிவமும் சத்தியும் ... | D. கோபால செட்டியார் | 65 |
| சுந்தரமூர்த்தி நாயனாரும் அவர் இல்லறமும் ... | E. N. தணிகாசல முதலியார் | 37 |
| சுயமரியாதை என்பது யாது ? ... | பத்திராசிரியர் | 173 |
| சுயமரியாதைச் சம்பாஷணை ... | பத்திராசிரியர் | 77 |
| சேரமான் பெருமாள் ... | அ. குமாரசுவாமிப் பிள்ளை | 279 |
| சைவக் குறும்பு ... | பத்திராசிரியர் | 243 |
| சைவ சித்தாந்தம் ... | ஸர் T. N. சிவஞானம் பிள்ளை | 9 |
| சைவப் பெரியார் தனிக்கூட்டத்தின் அவசியமும் வேலையும் ... | ச. சச்சிதானந்தம் பிள்ளை | 49 |
| சைவப் பெரியார் தனிக்கூட்டம் ... | பத்திராசிரியர் | 93 |
| சைவ மகாநாடு கூடுங்காலத்து நடத்தவேண்டுவன வற்றிற்குரிய கருத்துக்கள் ... | சி. பழனிக்குமாரன் | 73 |
| சைவர்கட்கு ஒரு வேண்டுகோள் ... | காரியதரிசி | 19 |
| சைவர் மகாநாடு, திருப்பாதிரிப்புலியூர் ... | காரியதரிசி | 156 |
| தமிழ்ப் புலமை ... | ஆறுமுக நாவலர் | 288 |
| தலைமைப் பேருரை ... | மறைமலையடிகள் | 125 |
| தலைமைப் பேருரை ஆராய்ச்சி ... | பொ. முத்தைய பிள்ளை | 197 |

| | | | |
|---|---|---|---|
| தலைமைப் பேருரைமேல் நிகழ்ந்த சில தடைகளுக்கு விடை | ... | மறைமலையடிகள் | 209, 253 |
| தாய்மை | ... | C. S. சுவாமிநாத முதலியார் | 11 |
| தாழ்வெனுந் தன்மை | ... | பத்திராசிரியர் | 221 |
| தூத்துக்குடி சைவ சபை | ... | ந. சிவகுருநாத பிள்ளை | 28 |
| தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன் | ... | வல்லை - பாலசுப்பிரமணியன் | 169 |
| நமது பத்திரிகை | ... | பத்திராசிரியர் | 1 |
| நமது வன்மை | ... | C. S. சுவாமிநாத முதலியார் | 297 |
| நம்மவர்கள் புராணங்களை எம்மட்டில் நம்புவது.. | | சா. நடேச நாயனர் | 91 |
| நூல்போன சங்கிலி | ... | பொ. முத்தைய பிள்ளை | 274 |
| பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே | ... | கி. குப்புச்சாமி முதலியார் | 182 |
| பிரிவாற்றுமை | ... | காரியதரிசி | 24 |
| பெண்ணடியவர் மூவர் | ... | பண்டிதை கிருஷ்ணவேணி யம்மாள் | 193, 239, 265, 283 |
| பொருத்தமற்ற தீர்மானங்கள் | ... | பொ. முத்தைய பிள்ளை | 119 |
| மதக்கொள்கையும் நம்பிக்கையும் | ... | C. S. சுவாமிநாத முதலியார் | 180 |
| மதிப்புரைகள் (ராப்பர் டக்கங்களோடு) | ... | பத்திராசிரியர் | 17, 68 |
| முத்தி எப்பொழுது ? | ... | J. N. இராமநாதன் | 291 |
| மௌனத்தில் சிந்திக்கத்தகுந்த கருத்துகள் | ... | N. இராமலிங்கம் பிள்ளை | 82 |
| யோகம் | ... | கா. சி. சிவசங்கர முதலியார் | 260 |
| வசைமொழி வேந்தர்கள் | ... | பத்திராசிரியர் | 164 |
| வல்லபாய் படேலின் சொற்பொழிவு | ... | கே. வேங்கடாசலம் | 249 |
| வாழ்த்துமணி | ... | புழலை - திருநாவுக்கரசு முதலியார் | 18 |
| விபரீதவுரைத் தேற்றம் | ... | கணபதிப் பிள்ளை | 310 |
| விறகிற்றீயினன் | ... | வே. நாராயணன் | 263 |
| வீணர்கள் வீடு | ... | பத்திராசிரியர் | 245 |
| வேட்டுவனும் அப்புழு | ... | A. M. முத்தைய நாட்டார் | 299 |

ஓம்

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு "

| மலர் ௨ | சுக்கில ஆண்டு மார்கழித் திங்கள்<br>1929 ஆம் டிசம்பர் மீ | இதழ் ௧௨ |
|---|---|---|

## அரிமா நோக்கு

[பத்திராசிரியர்]

சைவத் துறையில் தொண்டு புரியும் பேரறிஞர்கள் தருணம் வாய்த்த பொழுதெல்லாம் தமிழ் மக்கள் எவ்வாறு சைவத்தை வளர்க்க வேண்டும் என்று தெளிவாகத் தெரிவித்து வந்திருக்கிறார்கள். சைவ சமயத்துக்கு இன்றியமையாத பெருந் தாபனங்களாகிய ஆலயங்களும் மடங்களும் எவ்வாறு பண்டைக் காலத்தில் சமயக் கல்வி, சமய வளர்ச்சி, சமயப் பாதுகாப்பு முதலியவற்றைச் செய்து வந்தன என்பதையும் இத்தாபனங்கள் இப்போது எந்த நிலையிலுள்ளன என்பதையும் இவைகளைச் சீர்திருத்திப் பழையபடி இவைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் முறைகள் யாவை என்பதையும் இப்பேரறிஞர்கள் மிகத் தெளிவாகவே தெரிவித்து வருகிறார்கள். இத்தாபனங்களே யன்றி சைவசமயத்தை அநுட்டிக்கும் மக்களும் தங்கள் சமய வொழுக்கத்தில் குன்றி யிருக்கின்றனர் என்பதையும் அவர்கள் சீர்திருந்தினாலன்றி சமயம் தழைத்தோங்குத லரிதென்பதையும் இப்பேரறிஞர்கள் மிக விரிவாக எடுத்துரைத்து வருகிறார்கள்.

இவர்கள்கூறுவதையே ஆதாரமாகக் கொண்டு இவர்கள் கூறும் குறைகளை ஒன்றுக்குக் கோடிமடங்காகப் பெருக்கிக்காட்டி, பெருவிளக்கக்கண்ணாடியில் (miscroscope)ஒருசிறு அணுவை ஒரு பெருங் கற்போல் காட்டுமாறு போல பாமர மக்களை ஏமாற்றி அம்மக்கள் சமய வொழுக்கத்தைத் திரித்து அத்திரிபினின்றும் இயற்கையாகத் தோன்றும் மறவொழுக்கத்தையும் விளைவித்துப் பொது மக்களுக்கு இறுதியில் துன்பத்தையே பயக்கும் இயக்கம் ஒன்று இவ்வாண்டில் மிக்க வலியுடையது போல் தோன்றிற்று.

இத்தோற்றத்தின் வருகையைமுன்னரே அறிந்த நம் சமாஜத்தினர் சென்ற ஆண்டு நிறைவுவிழாவிலேயே ஏற்பாடு செய்து எல்லாச் சைவப் பேரறிஞர்களையும் ஒருங்கு சேர்த்துத் திருநெல்வேலியில் ஒரு பேரவை நிறுவி, சைவசமயத்தின் கோட்பாடுகள், அநுட்டானங்கள் முதலிய வற்றை ஏனைய சமயக் கோட்பாடுகள் அநுட்டானங்களோடு ஒப்பிட்டு இக்காலத்துக் கேற்றவாறு சைவசமயத்தை எவ்வாறு வளர்க்கவேண்டும் என்பதை இவ்வாண்டில் மிகத் தெளிவாகத் தீர்மானித்தனர்.

திரிபுணர்வில் திளைத் தின்புற்ற மேற்கூறிய இயக்கம் இச்சைவப் பேரவையின் தீர்மானங்களை அறிவுக்குப் பொருந்தாத வகையில் ஆராய்ந்து குறை கூறுவதாயிற்று. இத்தீர்மானங்களையும் இக்குறைபாடுகளையும் ஆலோசித்து முடிபு காண நம் தமிழ் நாட்டுச் சைவ சபைகளின் பிரதிநிதிகளெல்லாம் ஒன்றி வந்த பேரவை ஒன்று திருப்பாதிரிப்புலியூரில் கூட்டப்பட்டது. அப்பேரவை எல்லாவற்றையும் நன் காராய்ந்து பல உண்மைகளையும் தீர்மானங்களையும் சைவ உலகத்துக்கு வழங்குவதாயிற்று. இவ்வரும் பணியின் பலனாக சைவ உலகத்தில் பற்பல விஷயங்களில் சமீபத்தில் ஏற்பட்ட குழப்பங்களெல்லாம் நீங்கித் தெளிவு காணப்பட்டது.

எந்தத் துறையிலும் ஒரு பேரவை கூடினால் அதன் முடிபுகளும் தீர்மானங்களுமே பொது மக்களுக்கு நேரில் பெரும் பயனையோ மிக்க இன்பத்தையோ அளிப்பது கிடையாது. அம்முடிபுகளும் தீர்மானங்களும் அத்துறையில் உழைக்கும் அறிஞர்களுக்கும் சபைகட்கும் தொண்டு செய்யும் முறைகளையும், கவனிக்க வேண்டிய நோக்கங்கள், சீர்திருத்தங்கள் முதலியவைகளையுமே எடுத்துக் கூறும். அவைகளைப் பின்பற்றித் தொண்டர்களும் சபைகளும் எவ்வளவுக் கெவ்வளவு செலுத்தும் உண்மை ஊக்கமும் உழைப்பும் அதிகரிக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமாகவும் விரைவாகவும் பொதுமக்கள் அத்துறையில் பெரும்பயனையும் மிக்க இன்பத்தையும் அடைவார்கள். இது எல்லாத் துறைகளுக்கும் ஒத்த மக்கள் வாழ்க்கையின் அடிப்படையான ஒரு பொது உண்மை.

இவ்வுண்மையை நம் சைவத் துறையிலும் பொருத்திப் பார்த்தால் நம் சைவப் பேரவைகளின் முடிபுகளும் தீர்மானங்களும் சைவ உலகத்துக்கு எவ்வளவு பெரிய நன்மையைக் கண்கூடாக விளைவித்துள்ளன வென்பதை, இத்துறையில் உழைத்து வரும் சைவப் பேரறிஞர்களும், சைவச் சபைகளும் ஒன்றுகூடி இயற்றிய பணியைக் கொண்டே அறியவும் வேண்டும், அளக்கவும் வேண்டும்.

இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டு **அரிமா நோக்காகப்** பார்க்கும்போது நமக்கு பெரு மகிழ்ச்சியே உண்டாகின்றது. இச்சமாஜம் தோன்றிய நாள்தொட்டு இவ்வாண்டு வரையில் எத்தனைச் சைவ சபைகள் ஒத்துழைத்தனவோ அதைவிட மிக அதிகமான சபைகள் இவ்வாண்டில் நம் சமாஜத்தோடு பல வழிகளிலும் ஒத்துழைத் துள்ளன. அவ்வாறே சைவப் பேரறிஞர்களின் ஒத்துழைப்பும் பெரிதும் அதிகரித்தது. இதன் பலனாகத்தான் திருநெல்வேலியிலும், திருப்பாதிரிப்புலியூரிலும் அரிய பேரவைகள் சீரிய முறையில் கூட்ட இசைந்தது. நமது பத்திரிகையும் அஞ்சாது சைவ சமய வளர்ச்சிக்காகத் தொண்டுபுரிய முடிந்தது. சைவத் திருமுறைகளைக் குறைந்த விலைக்கு அச்சிட்டு வழங்கத் துணிந்து, ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப் பதிகங்களையும் வெளியிட்டுப் பல்லாயிரம் பிரதிகளும் அடக்க விலைக்குத்தந்து, ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரப் பதிகங்களையும் வெளியிடத் தொடங்கவும் முடிந்தது.

இவைகளை நம் சமாஜம் தற்புகழ்ச்சியாகவாவது சமாஜ உத்தியோகஸ்தர்கள் தற்புகழ்ச்சி யாகவாவது கூறுவதாக ஒருவரும் எண்ணுதல் கூடாது. பல சைவப் பெரியார்களின் பெரு முயற்சியும் பல சைவ சபைகளின் ஒத்துழைப்புமே இவைகட்குக் காரணம் என்பதை அனைவரும் அறிவர். இப்பெரு முயற்சியும் ஒத்துழைப்பும் இந்த அளவில் கிடைத்த இவ்வாண்டிலேயே இத்தகைய அரும்பணிகளைச் செய்ய நம் சமாஜத்துக்குக் கூடுமானால், மேன் மேலும் பற்பல சைவப் பெரியார்களின் பெரு முயற்சியும், சைவ சபைகளின் ஒத்துழைப்பும், **சைவச் செல்வர்களின் பெருநிதியும்,** செல்வமிக்க சைவத் திருமடங்களின் உதவியும், சிவாலய தரும கர்த்தர்களின் கூட்டுறவும், சைவ நன்மக்களின் ஊக்கமும் நமக்குக் கிடைக்குமாயின் நம் சமாஜம் யாதுதான் செய்ய இயலாது?

சைவசமய குரவர்களுள் ஒருவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் திருவெண்ணெய் நல்லூரில் தடுத்து ஆட்கொண்டு அவர்கட்கு அருள்பாலித்த எம்பெருமான் அவ்வூரில் கூடும் பெரியார்கட்கும் அருள்சுரந்து நம் சமாஜத்தையும் அஃதியற்றும் அரும் பணியையும் மேன்மேலும் சிறக்கச் செய்யுமாறு திருவருளை வழுத்தி, அத் திருவருளுக்குப் பாத்திரராகும் சைவப் பெரியார்களையும் சைவ சபைகளையும் ஆயிரக் கணக்காகத் திருவெண்ணெய் நல்லூரில் வந்து கூடும்படி பெரிதும் வேண்டுகிறோம்.

திருவெண்ணெய் நல்லூரில் கூடப் போகும் சைவர் மகாநாட்டின் நோக்கம், நடைமுறை முதலியவற்றைப் பற்றி இரண்டொரு வார்த்தை மட்டுங் கூறவிரும்புகிறோம். சாதாரணமாக அரசியற்றுறையில் கூடும் மகாநாடுகளைப் போல் கூடி, பற்பல சொல்லழகு வாய்ந்த தீர்மானங்களை நிறைவேற்றிக் கலைவது நமது மகாநாட்டின் நோக்கமல்ல.

ஒவ்வொரு சபையும் முன் கூடிய மகாநாட்டுத் தீர்மானங்களை எம்மட்டில் ஒழுக்கத்தில் கொண்டு வந்துள்ளது என்பதையும் எம்மட்டில் சைவ சமய வளர்ச்சிக்காக முயற்சி செய்துள்ளது என்பதையும் உள்ளதை உள்ளவாறே மகாநாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறே சைவப் பெரியார்களும் தாங்கள் வேலைத் திட்டம் எவ்வாறு போட்டுக் கொண்டு அத்திட்டத்தில் எம்மட்டில் செய்துள்ளார்கள் என்பதையும் அஞ்சாமல் தெரிவிக்கவேண்டும். இவைகளையெல்லாம் குறைகாணும் நோக்கத்தோடு ஆராயாமல், அதிக வேலை மேன்மேலும் செய்வதற்குத் தடையாயுள்ளவைகள் எவையெனக் கண்டுபிடித்து நமது மகா நாடு அத்தடைகளைப் போக்குவதற் குரிய வழிகளைத் தீர்



187138

மானிக்க வேண்டும். சைவப் பெரியார்களுடையவும் சைவ சபைகளுடையவும் கூட்டுறவும் தீவிர முயற்சியும் ஒத்துழைப்பும் ஆண்டுமுழுமையும் வேண்டும் வகையி லெல்லாம் கிடைத்தற்குரிய வழிகளையும் தீர்மானித்தல் நமது மகா நாட்டின் கடமையாகும். ஆகவே திருவெண்ணெய் நல்லூரில் நாம் கூடுவதின் முக்கிய நோக்கம் இதுவரையில் ஒவ்வொரு பெரியாரும் சபையும் செய்துள்ள வேலையை ஒப்பிட்டுப் பார்த்து (Compare Notes) இனிச் செய்ய வேண்டுவதைத் தீர்மானிப்பதே என்பது பெறப்பட்டது.

பொருள் இல்லாது எவ்வகைப்பணியும் செய்ய இயலாது என்று கூறி வாளாவிருக்கும் பெரியார்கட்கு ஒன்று மட்டும் கூற விரும்புகிறோம். ஓர் அறிஞர் உண்மையாகவும் ஊக்கத்தோடும் உழைக்கிறார் என்று திட்டமாக அறிந்தாலன்றி அவ்வறிஞர் செய்யும் அரும்பணிக்கு உதவியாக எவரும் பொருள்தர முன்வாரார். அஃதே போல், ஒரு சபையின் உத்தியோகஸ்தர்கள் உண்மையாகவும் ஊக்கத்தோடும் உழைத்து வருகிறார்கள் என்று திட்டமாக அறிந்தாலன்றி, அச்சபையினர் செய்யும் அரும்பணிக்கு உதவியாக எவரும் பொருள்தர முன்வாரார். ஊக்கமும் உண்மையும் உழைப்பும் முன்சென்று செல்வர்கள் மனதைப் பற்றினாலன்றிப் பொருள் பின்வருதல் இயலாது. ஆகவே நமக்குப் பொருள் தேவையில்லை; உண்மையாகவும் ஊக்கத்தோடும் உழைப்பவர்களே தேவை. அவர்கள் முன் சென்றால் பொருள் தானேவந்து கூடும். பொருளின்றி இவ்வாறு உழைப்பதே பொருள் திரட்டுவதற்கு உபாயம். ஆகவே நமது மகாநாட்டுக்கு வரும் அன்பர்கள், இவ்வாறு உழைக்க முன்வரும் புண்ணிய சீலர்களையும் அழைத்துவந்து, ஒருவருக்கொருவரை அறிமுகம் செய்து வைத்து, அவர்கள் கூட்டுறவையும் நம் சமாஜத்துக்கு அளிப்பது பேருபகாரமாகும்.

இனிப் பொருட் செல்வம் நிறைந்துள்ள பெரியார்கட்கு ஒன்றுகூறுதும். கோயில்களைக் கட்டுவதும் குளங்களை வெட்டுவதும் உத்ஸவாதிகளை நடத்துவதும் பெரும் புண்ணியங்களே. ஆனால் சைவ சபைகளைத் தாபித்தலும் அச்சபைகளில் சமய போதனை, சாத்திரப்பயிற்சி, திருமுறை யோதல் முதலியன செய்வித்தலும் கூடப் பெரும் புண்ணியங்களாகும். இப்புண்ணியங்கள் கோயில் கட்டுதல், உத்ஸவம் நடத்துதலை விட ஒரு சிறிதும் தாழ்ந்தன வன்று. இம்மையில் இன்பத்தையும், மறுமையில் வீடுபேற்றையும் இருவகைப் புண்ணியங்களும் நல்கும். ஆகையால் சைவச் செல்வர்கள் உத்ஸவாதிகளுக்குச் செலவழிப்பதைப் போலவே சமய போதனைக்கும் செலவழிப்பது மிகையாகாது. உத்ஸவாதிகளுக்குச் செலவிடும்பொருளைச் சமய போதனைக்கு மாற்றுவது அறிவுடைமையாகும். ஏனெனில் சமயவுணர்ச்சி யில்லாத ஆயிரம் அறிவிலிகள் உத்ஸவங்களின் உட்கருத்தை யறியாது வேடிக்கைப்பார்ப்பதைவிட, சமய போதனை பெற்ற ஐந்து அறிஞர்கள் அவ்வுட் கருத்துக்களை யறிந்து உற்சவங்களிற் கலந்து கொள்வது மிகவும் மேம்பட்டது. பொருட் செல்வம் நிறைந்துள்ள செல்வர்களும் நமது மகா நாட்டுக்கு வந்து பல சைவச் சபைகள் இயற்றிவரும் தொண்டுகளை நன்காராய்ந் தறியவும், அவைகளின் தொண்டுகட் கேற்றவாறு பொருளுதவவும் வேண்டுகிறோம்.

எல்லா வகையிலும் திருவெண்ணெய்நல்லூர் சைவர் மகாநாடு இனிது நடைபெறுமாறு இறைவன் திருவடிகளை வழுத்துகின்றோம்.

OFFICE 15 JAN 1930 MADRAS

# நமது வன்மை

[C. S. சாமிநாத முதலியார்]

உலகத்தில் சாதாரணமாய் ஒருவன் கஷ்டப்படுவதற்குக் காரணம் அவனிடமுள்ள இடம் பொருள் ஏவல் இவைகளைச் சரிவர உபயோகப்படுத்தாமையாயின் அவனை ஜனங்கள் பரிகாசம்செய்து தன்னிடம் உள்ளவற்றைப்பயன்படுத்திக்கொள்ளாத பைத்தியக்காரன் என்று கண்டனம் செய்வது வழக்கம். ஆனால் மானிட வர்க்கத்தில் மிகப் பெரும்பாலார் அம்மாதிரியான பைத்தியக்கார நிலைமையில் தாங்கள் இருக்கிறார்கள் என்கிற உண்மையை மாத்திரம் அறிந்து அதினின்றும் மீள முயற்சிக்கிறதில்லை.

நம்முள் ஒரு பெரிய சக்தி அமர்ந்திருக்கிறது. அதை முற்றிலும் நாம் தெரிந்துகொண்டு சரியான வழியில் நமக்கும் பிறருக்கும் உலக விகாச முறையில் இகத்திலும் பரத்திலும் ஒழுங்காகப் பயன்படுமாறு அதை உபயோகிக்கிறதில்லை. இந்த மடமையை நன்கு கவனிப்போமானால் நாம் பைத்தியக்காரர் என்பது தெரியும். அதை ஓர் உதாரணத்தால் விளக்கலாம். ஒருவனிடத்தில் ஒரு பெரிய பெட்டியில் அபரிமிதமான பொக்கிஷம் இருக்கிறது. பல வாயில்களில் அதைத் திறந்து வேண்டிய மட்டும் எடுத்துத் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் எல்லா வழிகளிலும் சுகம் உண்டுபண்ணிக்கொள்ள தனத்தைச் செலவழிக்க உரிமை வாய்ந்தவனாகவும் இருக்கிறான். அப்படி யிருந்தும் அவன் சில அற்ப வழிகளில் தான் அதை எடுக்கப் பயின்றிருக்கிறான். பாக்கி வழிகளைக் குருடன்போல் பார்க்காம லிருக்கிறான். எடுத்துக்கொண்ட சொற்ப தனத்தையும் அறிவு வாய்ந்த வழியில் உபயோகப் படுத்துகிறதில்லை. தனக்கும் பிறருக்கும் அநேகமாய் அசௌக்கியத்தையும் சொற்பசுகத்தையுமே கொடுக்கும் முறையிலேயே செலவழிப்பான். இம்மாதிரியான மனிதனை நாம் ‘அந்தோ! என்ன பைத்தியக்காரன் இவன். மிகுந்த செல்வத்தை வைத்துக்கொண்டு தானும் அநேகமாய்க் கஷ்டப்பட்டு பிறருக்கும் துன்பத்தையே விளைவிக்கிறானே’ என்று குறைகூறிப் பரிதபிப்போ மல்லவா? ஆழ்ந்து ஆராய்ச்சி செய்து பார்த்தால் மக்களில் இந்தக் கேவல நிலைமையில் இல்லாதவர் ஆயிரத்தில் ஒருவர் கூட தேருதல் அரிது.

ஏனெனில் நம் பரமபிதா அளித்த ஒரு பெரிய அரிய பொக்கிஷத்தை நாம் மேற் சொன்ன வழியில் தான் உபயோகித்து வரும் பரிதாபமான நிலையில் இருக்கிறோம். அதாவது நம்மிடம் இருக்கும் எண்ணம் என்கிற மகாசக்தி. இதனுடைய வன்மையைப் பற்றி நம்முன்னோர் புத்தகங்களில் வரைந் திருக்கிறார்கள். அதை ஒழுங்குபடுத்தி உபயோகிக்கும் முறைகளையும் வற்புறுத்தியிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையிலும் அதைப் பலவிதமாக உபயோகப்படுத்தி அநுபோக வாயிலாகவும் மெய்ப்பித்திருக்கிறார்கள். பிறரும் அம்மாதிரி செய்யக்கூடும் என்பதைத் தெரிவிப்பது அவர்கள் நோக்கமே யொழிய, தாங்கள் அற்புதமான நிலையை யடைந்தவர்கள் என்று சாதாரண மனிதர்கள்

மயங்கித் தங்களைப் பூஜிக்க வேண்டுமென்பதாகவாவது அல்லது தங்களைக் கொண்டாட வேண்டுமென்பதாகவாவது அல்லது தங்கள்பேரால் கோவில்கள் மடங்கள் அமைத்துத் தங்களைப் பெருமைப்படுத்த வேண்டும் என்பதாகவாவது அவர்கள் கருதுவதில்லை. ஆயினும் மனிதர்கள் செய்வதாவது பின்னர் கூறப்பட்டவைகளே.

மதக் கோட்பாடுகளிலும், ஆசார சீர்திருத்தங்களிலும், இன்னும் பலவித ஜனப் பொதுக்காரியங்களிலும் நம் தேசத்தில் அபிவிருத்தியாக வேண்டியதற்கும் தனியான வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் மேலான நிலைமையை யடைந்து தனித்தனியே நம் முடைய சாதாரண முப்பிரிவான வாழ்க்கையிலும் (அதாவது ஸ்தூல தேகம், உணர்ச்சி தேகம், மனோ தேகம், இவைகளின் மூலமாய் ஜீவாத்மா செய்யும் காரியங்களில்) நாம் நமக்கும் பிறருக்கும் உண்மையான சுகத்தைக் கொடுக்கும் முறையில் நடந்து கொள்வதற்கும் இவைகளுக்கும் மேலான படியாகிய மனதுக்கு அதீதமான துரியம் முதலிய நிலையை யடைவதற்கும் எண்ணம் என்கிற சக்தியை நாம் சரியாக உபயோகப்படுத்த வேண்டியதும் எண்ணத்தை அடக்குவதும் அவசியமாகும்.

நம் ஸ்தூல தேகத்தின் நன்மைக்காக எண்ணத்தை உபயோகிக்கும் முறையைக் கொஞ்சம் கவனிப்போம். சிலர் எண்ணம் என்கிற மனோசக்தியால்தான் எல்லாம் நடக்கும் என்பார். இது ஒருகோடி. இன்னும் சிலர் மனத்தால் ஆவது ஒன்றும் இல்லை, நல்லுணவு, சுத்தமான காற்று, தூய நீர், தேகப்பயிற்சி இவைகளால் தேகம் சரியான நிலைமையில் இருக்கக்கூடுமேயல்லாது எண்ணத்தால் யாதுபயன், அதைப்பற்றிப் பேசுவது வீண்பிரமையே என்று கூறுவது மற்றொரு கோடி. உண்மைவழி இவ்விரு கோடியான கொள்கைகளுக்கும் நடுவே உள்ளது. இந்த விஷயத்திலும் நடு நிலைமையைக் கடைப்பிடித்து வாழ்க்கை நடாத்துவதே அறிவுடையோர் முறையாகும்.

தேகவன்மைக்கு தேகப் பயிற்சி வேண்டும் என்று வற்புறுத்தும் சேண்டோ (Sandow) என்பவர் அவர் கூறிய முறைப்படி பயிற்சி செய்வோர் அக்காலத்தில் மனதைப் பயிற்சியில் நாட்டவேண்டும் என்றும் எண்ணமும் நம்பிக்கையும் சேர்ந்தாலல்லது பயிற்சியினால் அதிகப் பலனில்லை என்றும் கூறியிருப்பது ஞாபகத்தில் வைக்க வேண்டிய விஷயம். நமக்கு நம்பிக்கையில்லாத வைத்தியர் என்ன வைத்தியம் செய்தாலும் நோய் ஒழிவதில்லை. மருந்தோடு மனமும் வேலை செய்தால் தான் பலன் நிச்சயமாகிறது. சில சந்தர்ப்பங்களில் எண்ணத்தின் உதவியில்லாமலே வியாதி நீங்குதலும் உண்டு. மற்றும் சில சந்தர்ப்பங்களில் மருந்து இல்லாமலே எண்ணத்தின் பலத்தாலேயே வியாதி நீங்கலாம். அது நோயாளியின் எண்ணமாயிருந்தாலும் இருக்கலாம், அல்லது மனோ சக்தியின் வளர்ச்சி மிகவும் மேற்பட்ட ஒரு பெரியாரின் எண்ணமா யிருந்தாலும் இருக்கலாம். உண்மையில் அவ்வளவு வன்மையுள்ள எண்ணத்தையுடைய சான்றோர் மிக அருமையே. ஏதோ ஒரு காலத்தில் இவ்வருமையான செயல் நடந்ததைக் கொண்டு மருந்து எப்போதும் வேண்டியதில்லை அதனால் பயனில்லை என்று கூறுவது தகுதியல்ல. அப்படியே எண்ணத்துக்கு வலிமையேயில்லை அது பயனற்றது என்று கூறி விடுவதும் மடமை.

நம் அநுபோகத்தில் காண்பது அநேகம் இங்கே கவனிக்கற்பாலது. கடுமையான கோப காலத்தில் தாய் பால் கொடுத்ததால் குழந்தை இறந்ததைப் பற்றி, ஓர் அமெரிக்கா தேசத்தார் எழுதிய புத்தகத்தில் வாசித்திருக்கிறோம். கோபங் கொள்ளுங் காலத்தில் தலைவலி வருவது சாதாரணம். அதிக பயம் மனதில் உதிக்கும்பொழுது இருதயம் படபடவென்று அடிக்கிறது. உணவு கொள்ளும் பொழுதும் அதன் பின்பும் துக்கம் மனதைக் கவருமானால் அஜீரணம் உண்டாகிறது. இவைகளெல்லாம் எதைத் தெரிவிக்கின்றன? நம்முன்னே கிளம்பும் எண்ணங்களும் சுகதுக்க உணர்ச்சிகளும் தேகத்தைத் தாக்குகின்றன. மனதையும் உணர்ச்சிகளையும் படிப்படியாய் விகாச முறையில் ஜீவனுக்கு மேலும் மேலும் நல்வழியில் உபயோகப் படுவதற்காகச் சீர்ப்படுத்த வேண்டிய கடமை ஒரு பக்கம் இருக்க, தங்கள் தேகத்தின் சுகத்தை மாத்திரம் முக்கிய நோக்கமாய் வைத்துக் கொள்பவர்கள் கூட எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் ஒழுங்கு படுத்தி நாளுக்கு நாள் மேலும் மேலும் அவைகளை சீராக்குவது அவசியம். முடியுமானால் இன்னொரு கட்டுரையில் அந்த முறையைப் பற்றிச் சற்று விரித்து எழுதுவோம். அந்தப் பயிற்சி ஏதோ அசாதாரணமான யோகம் என்றும் எல்லாராலும் முடியாது என்றும் நினைப்பது சரியல்ல. எந்தத்தொழிலில் இருப்பவர்களும் எந்த வயதிலிருப்பவர்களும் எந்த ஜாதியில் பிறந்தவர்களும் தங்கள் மனதையும் உணர்ச்சிகளையும் நாளுக்குநாள் நற்பயிற்சி செய்யலாம் என்பதில் சற்றும் ஐயமில்லை.



---

# வேட்டுவனும் அப்புழு

[A. M. முத்தைய நாட்டார்]

## 1. வேட்டுவன் ஆம் அப்புழு

இம்மொழித் தொடர், நம்மாசிரியர் மெய்கண்டார், தானருளிய முதற் சூத்திரத்தின் "தோற்றிய திதியே ஒடுங்கி - மலத்துளதாம்" என்னும் இரண்டா மதிகரணத்தைக் கண்ணழித்து "இல்லதற்குத் தோற்றமின்மையின் உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினை யின்மையின், ஒடுங்கிய சங்காரத்தி னல்லது உற்பத்தியில்லை" யென்னும் மேற்கோளை வலியுறுத்துதற்கு எடுத்த விரண்டாம் திருட்டாந்த வெண்பாவில் இரண்டாம் பகுதியில் கூறியதாகும். அத் திருட்டாந்த வெண்பா,

"வித்துண்டா மூலமுளைத்தவா தாரகமா
மத்தன்றாணின்றலவர் வினையால்—வித்தகமாம்
வேட்டுவனா மப்புழுப்போல் வேண்டுருவைத் [தான் கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்து"

என்பதாகும்.

இவ்வெண்பாவில் முதற்பகுதியில், ஆசிரியர், ஒரு வித்தைத் துணையாகக் கொண்டு, அவ்வித்து முளைத்தலை

யாராய்ச்சி செய்து, இல்லதற்குத் தோற்ற மின்மை யென்பதையும், ஒடுங்கிய சங்காரத்திலே உற்பத்தி யென்பதையும் வலியுறுத்தி, ஒடுங்கிய மாயையினின்று உற்பத்தி யுண்டாக லின், மாயையே தோற்றுவிக்குமன்றி ஒரு நிமித்த காரணன் வேண்டற்பாற் றன்று என்று கூறுவர் மதத்தைக் கண்டித்து "அத்தன்றாள் நிற்றலவர் வினையால்" என்று நிமித்த காரணன் உண்டென்று கூறியுள்ளார். இக் கருத்தை ஒருவாறு சுருக்கிச் 'செந்தமிழ்ச் செல்வி'யில் "திருவள்ளுவர் ஒரு மாநூற் பேராசிரியர்" என்ற கட்டுரையில், வித்து முளைத்தலின் கீழ் வரைந்துள்ளேன். அதை நோக்குவீராக. நிற்க, இவ்வெண்பாவின் பிற்பகுதியாகிய "வேட்டுவனா மப் புழுப்போல் வேண்டுருவைத் தான் கொடுத்துக் கூட்டானே" என்னும் திருட்டாந்தத்தில் இங்கு ஆராய வெடுத்துக் கொண்ட மொழித்தொடர் அமைந்துள்ளதாகும். இப்பகுதிக்கு நம்முரையாசிரியர் சிவஞான முனிவர் 'வேட்டுவனாதலை விரும்பும் புழுவிற்கு வேட்டுவன் விரும்பிய வடிவினைக் கொடுக்குமாறு போல இறைவனும் அவரவர் வேண்டு முருவினைக் கொடுத்து அவ்வினைக்குத் தக்க பயன்களையுங் கூட்டுவனாகலான் அது கொண்டு சுதந்திரத்திற் கிழுக்கென்னை? என்று பொருள் கூறியுள்ளார். இச்சிற்றுரைக்கு விளக்கம் செய்யப் புகுந்த திருவாளர் பொ. முத்தையாபிள்ளையவர்கள் "வேட்டை வாளி (குளவிகளில் ஒரு சாதி) யாதலை விரும்பும் புழுவுக்கு அது விரும்பிய அவ்வடிவினைப் புழுவை யெடுத்து வைத்திருக்கும் அக் குளவி கொடுக்குமாறு போல அவரவர் விரும்பிய வண்ணம் விரும்புதலாகிய வினைக்குத் தக்க வடிவினையும் பயன்களையும் மாயையினின்று இறைவன் தோற்றுவித்துக் கூட்டுவனாதலால் அது கொண்டு சுதந்திரத்திற்கு இழுக்கில்லை யென்றவாறு என்று விரித்துக் கூறியுள்ளார்கள். இவ் விளக்கத்திற்குப் பிரமாணம் "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்னும் திருநாவுக்கரசு சுவாமிகள் திருமறைக்காட்டுத் தேவாரத்திலருளியதைக் குறிப்பிட்டிருக்கின்றனர். நிற்க, தற்காத்தில் சைவ சித்தாந்த சபைகளில் சொற்பொழிவு நடாத்தும் பெரியார் பலர், நம் வீடுகளில், வேட்டை வாளி யென்னும் குளவி, காட்டினின்று கொண்டுவரும், ஒரு புழுவை, பன்முறை கொத்திக் கூண்டிலடைத்து அப்புழுவை, வேட்டை வாளி குளவியாய் மாற்றுதல் போல, என்று விளக்கிச் செல்லுகின்றார்கள். இங்ஙனம் விளக்கி வருதலைச் சைவசித்தாந்த சபைகளுக்குமுறையே சென்று சொற்பொழிவுகள் கேட்போர் நன்கறிவார்கள். இக்கட்டுரையைப் படிக்கும் தமிழபிமானிகள் சற்று கவனித்து ஆசிரியர் மெய்கண்டார் வாக்கையும், சிற்றுரை யாசிரியர் சொற்போக்கையும், விளக்கத்தார் கண்ட தன்மையையும், பிற்காலத்தார் கொண்ட கொள்கையையும், உருவிப் பொருள் கொள்ளின், மெய்கண்டானாண்டு 706 அளவில், நம்முன்னோர் நம் தமிழ்மொழியில் கண்ட பொருள், விரைந்து மாறுபட்ட உருக்கொண்டு, மிகஸ்தூல முற்று, நுண்ணூற்கு மாறுபட்ட கொள்கையாய் நிற்கும் கொடுமையைக் கண்டு விசனியாதிருத்தலரிது.

நிற்க, முதற்கண் இவ்வாராய்ச்சியைப்பரபக்கம், சுபக்கமென விருகூறு



க்கி, பரபக்கத்தினின்று ஆசிரியர் எடுத்துக் காட்டிய திருட்டாந்தத்திற்குப் பொருள் கொண்ட பிற்காலத்தார் கொள்கையை ஆராய்வாம். இங்ஙனமாராயுங்கால், ஆசிரியர் எடுத்துக்காட்டிய திருட்டாந்தம், ஆசிரியர் தானே விளக்கிய ஏதுமேற்கோளிவைகளுக்கு முரண்படா திருத்தலுடன், சைவ சித்தாந்தத் துணிபிற் குடன்பட்டிருத்தலு மொருதலை. இனித் "தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்" என்பது ஆசிரியரருளிய முதற் சூத்திரத்தி னிரண்டா மதிகரணமாகும். இவ்விரண்டா மதிகரணத்தைக் கண்ணழித்து இத்திருட்டாந் தத்தையும் ஆசிரியர் காட்டினரென்க. மேற்காட்டிய முதற்சூத்திரத்தி னிரண்டா மதிகரணத்தையும், அதை விளக்கக்காட்டிய திருட்டாந்தத்தையும் நன்குணர, மேற்காட்டிய ஏதும் மேற்கோளும் காட்டினார். இவைகளில் 'இல்லதற்குத் தோற்றமின்மையின்' என்றெதிர் மறையில் கூறினமையால், 'உள்ளதற்குத் தோற்ற முண்டென்பதும்' 'ஒடுங்கிய சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை' என்றமையால் 'ஒடுங்கிய சங்காரத்தி னின்று உற்பத்தி யுண்டென்னும்' உடன்பாடும் கொள்ளக் கிடக்கின்றன. ஆதலின் தற்காலம் சொற்பொழிவாளர்கள் கூறும் கூற்று மேற்காட்டிய மூன்றளவை யிலக்கணங்களையும் அவற்றின் உடன்பாடுகளையும் தழுவியதாக நிற்றல்வேண்டும். ஆனால் மேற்காட்டிய சொற்பொழி வாளர்களின் கூற்றின்படி, வேட்டை வாளிக் குளவி, பேர், குலம் தெரியாத ஒரு புழுவைக் காட்டினின்று கொண்டு வந்து, அதைப் பல தடவைகள் கொத்திக் கூண்டிலடைத்துத் தன்னைப் போல், ஒரு வேட்டை வாளிக்குளவியாய்ச் சின்னாளிலாக்கிவிடும் என்று கொள்ளக் கிடக்கின்றது. இக்கொள்கையில், வேட்டுவனென்கிற குளவியும், காட்டினின்று கொண்டு வரப்பட்ட புழுவும் வெவ்வே றுயிரென்பது தெற்றெனத் தெரியக் கிடக்கின்றது. ஆதலின், வேட்டுவனென்னும் குளவியினிடமுள்ள உள் பொருளும், புழுவினிடமுள்ளஉள்பொருளும் வேற்றுமையுடைய தென்பது பெற்றாம். எனவே, வேட்டுவனாகு முள் பொருள் புழுவினிடமில்லை யென்பதும் பெற்றாம். வேட்டுவனாகும்உட்பொருள் இல்லாப் புழு வேட்டுவனாயிற் றென்னில் இக்கூற்று, இல்லதற்குத் தோற்ற மின்மையின் ஒடுங்கிய சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை' என்னும் ஏது மேற்கோள் இவைகளுக்கு முரண்பட்டுக் குற்ற முடைத்தாதல் காண்க. அன்றி, அவ் வேட்டை வாளிக்குளவி, பல தடவை இப் புழுவைக் கொத்துதலால், புழுவினுள் பொருளை மாற்றி விடுமெனக் கொள்ளின், அதுவும் பொருத்தமுடைத்தன்று. என்னை? ஒருயிரின் உள் பொருளை மாற்றுவது மற்றோருயிராலாகாதாதலானும், இதை யியற்கையில் கண்டிலமாதலானும் என்க. அன்றிக் குளவி, புழுவைப் பல தடவைகளில் கொத்துதலால், தன் உள் பொருளை மிகைபடப் புழுவினிடம் நுழைத்து அப்புழுவின் உள்பொருளே தோன்றாமலும், நுழைக்கப்பட்ட உள் பொருளே தோன்றி நிற்றலுங் கூடும் என்று கூறின், இது கொண்டு ஈண்டைக்குப் பெற்ற பயனென்னை? குளவியின் உள்பொருளே குளவியாயிற்றென்றும், புழுவினுட்பொருள் குளவியாக மாறாது உள்ளழுந்தி

நின்றதென்றும் பெறப்படுதலால் இவ்
வெடுத்துக் காட்டு ஈண்டைக்குயாதும்
பயனுடைத்தன்று. என்னை? இங்கு
ஆசிரியர் இவ்வெடுத்துக் காட்டால்,
விளக்க நோக்கியது ஒடுங்கிய சங்
காரத்தினின்று உற்பத்தி யுண்டென்
னும் சித்தாந்தக் கருத்தை யாதலின்,
இக்கருத்தை மேற்காட்டிய கொள்
கைப்படி, இவ்வெடுத்துக் காட்டு
விளக்கவில்லையென்பது வெளிப்படை.
ஆதலின், சொற்பொழிவாளர்கள், ஆசி
ரியர் கருத்தை புருவி யாராயாதும்,
திரித்தும், சைவ சித்தாந்த சபை
களில் மக்கள் நம்பும்படி இவ்வண்ணம்
விரித்துக் கூறுதல் குற்றமுடையதாவ
துடன் நம் சைவக் கொள்கையையும்
மாறுபடக் கூறியதாகும்.

நிற்க, நம் பிள்ளை யவர்கள் கூறி
நிற்கும் விளக்கத்தைச் சற்றுராய்வாம்.
இவ்விளக்கத்தில், "வேட்டை வாளி
யாதலை விரும்பும் புழுவிற்கு அது
விரும்பிய அவ்வடிவினை அதை யெடு
த்து வைத்திருக்கும் குளவி கொடுக்கு
மாறு போல" என்று கூறியுள்ளார்.
இவ்விளக்கத்தில், புழு ஓர் உயிரென்
றும், குளவி வேறோருயி ரென்றும்,
விளக்கவாசிரியர் குறிக் கொண்டதாக,
புழு விரும்பியதற்கேற்ப,எடுத்துவைத்
திருக்கும் குளவி கொடுக்குமென்ற
தனால் அறியக் கிடக்கின்றது. குளவி
யினின்றும் வேறாகிய புழு ஏன் குளவி
யாதலை விரும்பிற் றென்று தோன்ற
வில்லை. ஓருயிரினின்று கிளம்பும்
விருப்பமே, அவ்வுயிரி னுள்பொரு
ளின் காரியமாதலால், யாதொரு
தொடர்பு மற்ற புழு, குளவியாதலை
விரும்புதற்கு யெக்காரணமும் காணப்
பட்டிலது. அன்றி, ஒரு தனித்த புழு
விற்கு, ஒரு குளவி தன் வடிவினைக்
கொடுக்கு மென்றால், ஒடுங்கிய சங்
காரத்தி னல்லது உற்பத்தியில்லை
யென்ற மேற்கோளுக்கும் முரணுகின்
றது. அன்றி, ஓருயிர் மற்றோருயிரு
க்கு அது வேண்டிய வடிவினைக்
கொடுக்குமென்றால், இறைவன் உல
கத் தோற்றத்திற்கு வேண்டற் பாற்
றன்று என்று கொள்ளக்கிடப்பது
டன் 'அத்தன்றான் நிற்றலவர் வினை
யால்' என்ற ஆசிரியர் காட்டிய துணி
பிற்கும் முரண்படுகின்றது. அன்றியும்
குளவி கொடுக்குமாறு போல இறைவ
னும் கூட்டுவனென்பதினால், குளவி
யும் இறைவனும் ஒரு நிலையிலுள்ள
தாயும் ஓர் ஆற்றலுள்ளதாயும் சீர்
தூக்கப்பட்டு, சிற்சக்தியுடைய குள
விக்கும், முற்றுமையுடைய இறைவ
னுக்கும் வேற்றுமை காணுறாது
முரண்படுகின்றது. அன்றியும் புழு
ஒரு வித்துப்போன்று ஒடுங்கிய நிலை
யல்லவாதலால், அதனின்று உற்பத்தி
யுண்டெனில், 'ஒடுக்கத்தி னல்லது
உற்பத்தியில்லை' என்ற அளவை யிலக்
கணத்திற்கும் முரண் படுகின்றது.
இனி நம் விளக்கவாசிரியர் எடுத்துக்
காட்டிய "வேண்டுவார் வேண்டு
வதே ஈவான் கண்டாய்" என்னும்
அப்பர் வாக்கைக் கவனிப்பினும்,
புழுவேயெனினும், மக்களே யெனி
னும், அவரவர் வினைக்கேற்ற உரு
வினைக் கொடுப்பவன் இறைவனே
யன்றிப் புழுவுமன்று மக்களுமன்று
என்று கொள்ளக் கிடப்பதை யறிய
வும். அப்பர் சுவாமிகள் மக்களைக்
குறித்துக் கூறினமையால், அஃறிணை
யுள்ளுயிரைக் குறிக்கவில்லை யென்று
கொண்டனர் போலும். ஆதலின்,
அப்பர் வாக்குப் பெற்றிமையுடைய
தெனினும், அஃது விளக்க வாசிரியர்
பொருள் கொண்ட முறைக்குப்
பொருந்தாததுடன், தான் விளக்



பொருளை யாதரிப்பதுமன்றென
வர்க. அப்பர் வாக்கைப் பின்னு
மாராய்வாம்.

இனி நம்முரையாசிரியர் சிவஞான
முனிவ ருரையைச் சற்றுராய்வாம்.
இவருரையில், முனிவரவர்கள், புழு
வும், குளவியும் வேறுயி ரெனக்
காட்டவில்லை. அன்றிப் புழுவை
யெடுத்து வைத்திருப்பது குளவி
யென்றும் காட்டவில்லை. அஃதே
யன்றிப் புழுவையெடுத்து வைத்திருக்
கும் குளவியே, புழுவிற்குக் குளவி
உருவம் கொடுக்குமென்றும் காட்ட
வில்லை. எனினும், உரையாசிரியர்
'வேட்டுவனு தலை விரும்பும் புழு
விற்கு வேட்டுவன் விரும்பிய வடி
வினை' என்றதனால், விளக்கவாசிரி
யர், கொடுக்குமாறுபோல என்றதின்
பின் மாத்திரை யடையாளமிட்டுக்
'கொடுக்கும்' என்ற வினையைக் குளவி
யின் செயலாய்க் காட்டுகின்றார்.
ஆனால் நம் நாவலர் பதிப்பில், அங்ங
னம் யாதானு மொரு மாத்திரைப்
புள்ளி 'போல' என்றதின் பின் கண்
டிலம். ஆதலின் மாத்திரைப் புள்ளி
கொடுத்து, கொடுக்கு மென்ற வினை
யைக் குளவிக்காக்கியது, பிள்ளையவர்
களால் தம் கருத்துக் கேற்பச் செய்த
தொன்றே யாகும். இனி நம் விளக்க
வாசிரியர், "வேட்டுவனுதலை விரும்
பும் புழுவிற்கு வேட்டுவன் விரும்பிய
வடிவினைக் கொடுக்குமாறு போல"
என்ற வுரையாசிரிய ருரையை, விளக்
கப் புகுங்கால், வேட்டுவனுதலை விரும்
பும் புழுவிற்கு (அது விரும்பிய அவ்
வடிவினைப் புழுவை எடுத்து வைத்
திருக்கும் அக்குளவி) கொடுக்குமாறு
போல என்று கொண்டு கூட்டுகின்ற
னர். அங்ஙனம் கொண்டு கூட்டற்கு
முனிவருரை யெங்ஙன மிடந்தந்தது
என்று விளங்கவில்லை. இங்ஙனம்
விளக்குவது முனிவர் குறிப்பா யிருப்
பின், அவர், 'விரும்பிய' என்ற சொல்
லைப் புழுவிற்கு முன்னும், வேட்டுவ
னுக்குப் பின்னும் கூற வேண்டுவ
தில்லை. என்னை? முனிவர் கருத்
தது வென்னில், அவரே, 'வேட்
டுவனுதலை விரும்பும் புழுவிற்கு
அவ்வடிவினை வேட்டுவன் கொடுக்கு
மாறு போல' என்று ஆற்றுப்போக்காய்
உரைகூறி நிற்பர். அங்ஙனம் கூறாது
நிற்றலால், முனிவர் கருத்தது அன்
றென்பது வெளிப்படை. நிற்க, ஆசி
ரியர் வாக்கும் அங்ஙனம் பொருள்
கொள்ள இடந்தர முற்றிலும்மறுத்து
நிற்றல் காண்க. 'வேட்டுவன் விரும்
பியவடிவினை' எனவிரித்துக் கூறுவதே
முனிவர் கருத்தெனினும், ஆசிரியர்
'அப்புழு' என்று சுட்டிப் புழுவிற்கும்
வேட்டுவனுக்கு முள்ளதின் தொடர்
பைக் காட்டினமையால், முனிவர் புழு
விற்கும் விருப்பத்தை யேற்றிக் காட்
டினர். இங்ஙனம் முனிவர் இருபக்
கமும் மிகவுமாழ்ந்த கருத்துடன்
விருப்பத்தை யமைத்தனரே யன்றி
வேறல்ல. இதைப் பின்னுராய்வாம்.
நிற்க, 'கொடுக்குமாறு போல' என்ற
தொடரிலுள்ள, கொடுக்கு மவ்வினை
யெக்கருத்தாவைத் தழுவி நிற்கின்ற
தென்பதே மிகவும் ஐயப்பாட்டிற்
கிடனாய் நிற்பது. விளக்கவாசிரியர்,
கொடுக்கும்வினை வேட்டுவனைத் தழுவி
நிற்பதெனப் பொருள் கூட்டுகின்ற
னர். இங்ஙனம் பொருள் கூட்டற்
குத் துணையாய் நிற்பது 'இறைவ
னும்' என்றதிலுள்ள 'உம்'மையே
யாகும். இவ்வும்மையைக் கொண்டு
வேட்டுவன் கொடுப்பதுபோல இறை
வனும் கூட்டுவன் எனப் பொருள்
கொள்ள விளக்கவாசிரியர் விரிக்கின்

னர். ஆனால் நம்முரையாசிரியர், இறைவன் காரியத்திற்கு வேட்டுவன் செயல் இங்கு உவமானமன்று என்று காட்டற்கே, தான் காட்டிய குறிப்பில் 'போல' என்ற சொல்லை உவமானப் பொருளில் கொள்ளாது அசை யென்றார். அங்ஙனம் உரையாசிரியர் குறிப்பித்தும், விளக்கவாசிரியர் வலிந்து உவமானப் பொருளில் விளக்குதல் எற்றிற்கோ வறியேம். மேலும் மக்கள்பால் இறைவன் அவரவர் வினைக்கேற்பத் தக்க பயன்களைக் கூட்டுதல் போல, மற்றபல்லுயிர் தொகுப்பிலும் அவ்வவற்றின் வினைக்கேற்பக் கூட்டுதல் முறைமையாகும். அற்றன்றி, மக்கள்பால் காணுறும் நிகழ்ச்சிகள் இறைவனாலாயதென்றும், மற்ற பல்லுயிர்த் தொகுப்பில் காணுறும் நிகழ்ச்சிகள் இயற்கையாலாய தென்றும் பொருள் கூறல் இழுக்குடையதாகும். மற்று 'இறைவனும்' என்றதிலுள்ள 'உம்' எதைக் குறிக்குமோ வென்னில், எடுத்துக்காட்டிய விரண்டு வேறுபட்ட விடங்களில் நிகழும் ஒற்றுமைப்பட்ட விறைவன் செயல்களைப் பிணைத்துக் காட்டிய வொன்றினின்று காட்டப்படும் ஒன்றை ஆக்கத்துடன் கூறுவதாகும். எனவே புழுவிற்கு வேட்டுவன் வடிவினைக் கொடுப்பதும் இறைவன்; அவரவர் வினைக்கேற்பப் பயன்களைக் கூட்டுதலும் இறைவன் என்பது பெற்றாம். எனவே உரையாசிரியர் சிற்றுரையெவ்வாற்றானும், விளக்க வாசிரியர் விளக்கத்தை யாதரிப்பதாய்க் கொள்ள இடமில்லை.

இனி, ஆசிரியர் அருளிய 'வேட்டுவனாமப்புழு' என்ற தொடரைச் சற்றாராய்வாம். இத்தொடரில், நம்முனிவர் சுருக்கிக் காட்டிய பொருளையன்றிப் பல விரிவுரைகளும் கொள்ளக் கிடக்கின்றன. (1) முதற்கண், ஆசிரியர் 'அப்புழு' என்று சுட்டிக் காட்டினமையால், அப்புழு ஓரறியக்கிடக்கும் குலத்தில் தோன்றிய புழுவென்பதைக் குறிக்கின்றார். (2) 'வேட்டுவனாமப்புழு' என்றமையால், சுட்டிக் காட்டிய வப்புழு வேட்டுவனாகும் என்பது பெற்றாம். (3) அப்புழுவே வேட்டுவனாகும் எனக் கொள்ளக்கிடப்பதால் அப்புழுவும், வேட்டுவனும் ஒரு வகைத் தொடர்புடைய தென்பது பெற்றாம். (4) 'வேட்டுவனாமப்புழு' என்றமையால், அவ்வுயிரின் வாழ்வில் புழுவின் நிலை யொன்றென்றும், வேட்டுவனிலை யொன்றென்று மிரண்டிற்கும் தொடர்புண்டென்பதும் பெற்றாம். (5) புழு வேட்டுவனாகும் என்றமையால், புழுவின் நிலையைவிட வேட்டுவனிலை முதிர்ந்த நிலை யென்பது பெற்றாம். (6) வயது முதிர்ந்த நிலையினின்றே மக்கள் பேறு அடைதல் உலக வியல்பாதலின், வேட்டுவன் வழியே புழுத் தோன்றிற் றென்பதும் பெற்றாம். (7) இனி வேட்டுவன் வழியே தோன்றிய புழு, வேட்டுவனாதலை விரும்புவது இயல்பென்பதும் பெற்றாம். என்னை? வேட்டுவனிடத்தினின்றே பெற்ற உட்பொருளே, ஈண்டைப் புழுவாய்த் தோன்றி நிற்றலாலென்க. (8) புழுவி னுட் பொருள், வேட்டுவ னுட் பொருளினொரு சிறு பகுதியே யாதலின், வேட்டுவன் மாட்டு நிகழ்ந்த விருப்பமும் அதன் காரணங்களும் ஈண்டு காண்டலியல்பு. எனவே, புழு வேட்டுவனாதலை விரும்புதலும், வேட்டுவனப்புழு வேட்டுவனாதலை விரும்புதலும், ஒரு வகைத் தொடர்புப் பொருள் கொண்டு நிற்றலியல்புடைத் தெனக் கொள்க. இக்



குறி கொண்டே நம்முரை யாசிரியர் 'விரும்பிய' என்ற எச்சத்தை, புழுவிற்கு முன்னும், வேட்டுவனுக்குப் பின்னும், மிகவும் திறம் பட முறைமை கொண்டு விரித்துப் பொருள் கூறுகின்றனர். இப் பெற்றியறியாதே, நம் விளக்க வாசிரியர் விளங்கா விளக்கம் செய்தனர். (9) இனி வேட்டுவனென்று தொழிலாகு பெயரால் குறித்தமையால், அவ்வுயிர் வேட்டையாடும் தொழிலுடையதென்பது பெற்றாம். (10) வேட்டையாடுதல் இயற்கையில், மிகுதியும் உணவுப் பொருள் பெறற்கே யாதலானும், வேட்டையாடிக் கொணரும் உணவுப் பொருள் மிகுதியும் புலாலுணவே யாதலானும், அவ்வுயிர் (வேட்டுவன்) புலாலுண்ணு முயிர்வகையைச் சேர்ந்த தென்பது பெற்றாம். (11) நிற்க, ஒருயிரின் ஒரு நிலையை வேட்டுவனென்றும், மற்றொரு நிலையைப் புழுவென்றும் சுட்டிக் கூறினமையால், அவ்வுயிர், வேட்டுவனிலையில், வேட்டையாடு மாற்றலுடைய தென்பதும், புழுநிலையில் வேட்டையாடு மாற்றலற்ற தென்பதும் பெற்றாம். (12) உலகில் எவ்வுயிரும் தன்னுடலின் ஒருபகுதி கொண்டர்வது அன்றித் தன்னுடலுக்குற்ற உணவு கொண்டாவது, தன்வழித் தோன்றிய கான்முளையைப் புறத்தில் அது தானே திரிந்து தனக்கு உற்ற உணவைத் தெரிந்துகொள்ளு மாற்றலடையு நிலைபெறுவரையும், காப்பாற்றுவதைக் கண்கூடாய்க் காண்கிறோம். மக்கள், பசுமுதலியவிலங்குகள், தங்களிளங்கன்றைப் பால்கொடுத்துக் காப்பாற்றுவதும், மற்றப் பறவைகள் உற்ற உணவுப் பொருள் கொடுத்துத் தன் குஞ்சுகளைக்காப்பாற்றுவதும், கோழி முதலியன, உற்ற உணவைக் காண்பித்துத் தங்கள் குஞ்சுகளைக் காப்பாற்றுவதும், பூச்சிகள் (insects) தங்கள் புழுக்களை உற்ற உணவு உள்ள விடங்களில் பெற்று அவ்வுணவுப் பொருள் கொண்டு வளரச் செய்வதும், மரம் முதலியன தங்கள் கான் முளைகளை அவைகளுக்குற்ற உணவுகளை அவைகளிடமே பொதிந்துவைத்து, வேறிடமுற்று முளைத்த காலையில் அவ்வுணவு கொண்டிளமையில் வளரச் செய்தலும் உலகில் மலிந்து காணப்படும் திருட்டாந்தங்களாகும். இம் முறையில் வேட்டுவன், புலாலுண்ணு மினத்தைச் சேர்ந்தமையால், தன் வழித் தோன்றிய வேட்டையாடும் ஆற்றலற்ற புழுவிற்கு, வேட்டுவனால், புலாலுணவு கிடைக்குமிடந் தெரிந்து விடப்படுதலோ அன்றி உற்ற புலாலுணவு அதனிடம் அமைக்கப் பெறுதலோ ஆகிய ஒரு பணி ஆற்றுங் கடமைநிறைவேற்ற வேண்டற்பாலது என்பதும் பெற்றாம். பிறவும் இங்ஙனமே விரித்துக் கண்டு கொள்க. இங்ஙனம் ஆசிரியர் கருத்தை உருவி எவ்வாற்றானுமாராயினும், பல புதிய ஆழ்ந்த கருத்துக்கள் தோன்றுகின்றனவேயன்றி, எவ்வாற்றானும், எங்கும், விளக்கவாசிரியர் கருத்து, ஆசிரியர் வாக்கிலமையக் கண்டிலம்.

இனி வழி நூலாசிரியர்கள், ஆசிரியர் காட்டிய இவ்வெடுத்துக் காட்டைக் கருத்தி லுருவிக் கொணர்ந்து பொருள் விளக்கி யுள்ளார்களென்பதை யொருவா றாராய்ந்து, அற்றேனும் நம் விளக்கவாசிரியர் கருத்துக் காண்டலுளதோவென வாராய்வாம். வழிநூல் புடை நூலாசிரியர்களில், நம் அருணந்திசிவம் தவிர மற்றையோர் இவ்வெடுத்துக் காட்டை யெங்கும் விளக்கக் கண்டிலம். ஆனால் நம்

அருணந்திசிவம், தானருளிய சிவஞான சித்தியாரில் இவ்வெடுத்துக் காட்டை மிகவும் அழகும், அரும்பொருளு மிளிர விளக்குகின்றனர்.

"வண்டுக ளாகிமாறு மயிர்க்குட்டி
மற்றோர் செந்துப்
பண்டைய வுருவந்தானே
வேட்டுவ னாய்ப்பிறக்குங்
கண்டுகொள் யோனியெல்லாங்
கன்மத்தான் மாறுமென்றே
கொண்டன சமயமெல்லா
மிச்சொனீ கொண்டதெங்கே"

இச்செய்யுளில், நம்மருணந்திசிவம், 'மற்றோர் செந்துப் பண்டைய வுருவந்தானே வேட்டுவனாய்ப் பிறக்கும்' என்று நுண்ணூற் கருத்து மிளிரக் கூறும் வாக்கு ஆன்றோர்கள் கூர்ந்தாராயத்தக்கது. இவ்வெடுத்துக்காட்டில் 'மற்றோர் செந்து' என்றமையால், முன் வண்டைப்பற்றிக் கூறினமையால் இன்னும் மற்றொரு செந்தைக் காட்டி விளக்குகின்றனர். 'செந்து' என்றமையால் அவ்வுயிரும் ஒரு விலங்கினத்தைச் சேர்ந்த தென்பது பெற்றாம். "பண்டைய வுருவந்தானே வேட்டுவனாய்ப் பிறக்கும்" என்றமையால், பண்டைய வுருவம் வேறு, வேட்டுவ னுருவம் வேறு என்றமையாது, இரண்டுருவமும் தொடர்புடைய தென்பதும் பெற்றாம். 'தானே' என்று தேற்றவேகாரம் கொண்டு விளக்கினமையால், பண்டைய வுருவமே (புழுவே) வேற்றுமைப் பட்டு வேட்டுவனாகு மென்பதும், 'பிறக்கும்' என்றமையால், அங்ஙனம் வேறுபடுங்கால், ஏற்படும் உருவம், பண்டைய வுருவத்திற்கும், வேட்டுவனாகிய ஓர் உருவத்திற்கும், இடையில், மிகவும் வேற்றுமையுடைய ஓர் உருவம் தோன்றுமென்பதும், அதினின்று வேட்டுவ னென்ற உருவம் பிறக்கு மென்பதும் பிறவும் பெற்றாம். இனி இச் செய்யுளுக்கு உரை செய்த சுப்பிரமணிய தேசிகர் "மற்றுமோர் புழுத் தன் பழைய வடிவமே வேட்டுவனாக அச்சுமாறும் என்பது" என்று கூறியுள்ளதையும், இச்செய்யுளுக்குப் பொழிப்புரை செய்த நம் சிவஞான முனிவர் "இம்மையிலும் வண்டு முதலியன அச்சுமாறுதல் கண்கூடாயறியக் கிடத்தலானும், இஃதெல்லாச் சமய நூல்கட்கு மொப்ப முடிந்ததாகலானும், அக்காட்சி யளவையோடும் உரை யளவையோடும் முரணிக் கூறுவார் கூற்றுப் போலி" என்று விளக்கியதையும் ஆன்றோர்கள் மிகவும் நுணிகி யாராய வேண்டற் பாற்று. இங்கு நம்மருணந்தி சிவத்தின் "பண்டைய வுருவம் தானே வேட்டுவனாய்ப் பிறக்கும்" என்ற ஆன்ற விளக்கத்தின் தெளிவையும் அதற்கு உரை கண்ட இருவர் நுண்ணூல் முடிபையும் ஆராயின், புழுவின் அச்சே, பரிணமித்து வேட்டுவனாய் அச்சுமாறும் என்பது பெற்றாம். அஃதேயன்றிப் புழுவை யெடுத்து வைத்திருக்கும் குளவி புழுவிற்கு வேட்டுவனாகிய உருவைக் கொடுப்ப தன்றென்பது பெற்றாம். இங்கு காட்டிய, சிவஞானமுனிவர் பொழிப்புரை கொண்டே, அவர் சிவஞான போதச் சிற்றுரை, நம் விளக்க ஆசிரியர் விளக்கிய வண்ணம் பொருள் கொள்ளச் செய்திருக்க முடியா தென்பது வெளிப்படை.

இனி, மேற்காட்டிய பல்வேறு வகைப்பட்ட கருத்துக்களைத் தற்கால இயற்கை நூல் (Natural science) முடிபு கொண்டாராய்வாம். முதற்கண் பல சைவசித்தாந்திகள் கொள்கையை நோக்கின் கீழ்க்கண்ட ஐயப்பாடுகள் தோன்றுதலியல்பு.

(i) ஒரு குளவி மற்றொரு புழுவைக் கூண்டி லடைக்குமெனில், அடைக்கப்பட்ட புழுவை, அடைத்த சின்னாழிகைகளில், அக்கூண்டிலிருந்து எடுத்து வேறு கூண்டி லடைத்து வளர்க்க, அப்புழு குளவியாக வேண்டும்.

(ii) புழுவடைக்கப்பட்ட கூண்டை, அன்றே, அன்றி மறுநாளோ, திறந்து பார்க்கின் அக்கூண்டினுள் அப்புழுவையன்றி வேறு ஒன்றும் காணப்படல் கூடாது.

(iii) புழுவடைக்கப்பட்ட கூண்டைச்சின்னாள் கழித்துத் திறந்து பார்க்கின், அக்கூண்டினுள் அப்புழுவே வளர்ந்து கொண்டிருக்கவேண்டும்.

இம்மூன்று வகைகளிலும் காட்சி யளவை கொண்டாராயின், கீழ்க் கண்ட முடிபுகள் காண்ட லியல்பு.

I. அடைக்கப்பட்ட புழுவை, வேறு கூண்டி லடைக்கில் அப்புழு வளராது சோயுற்று இறந்து விடுகிறது. அன்றி வளரின், அப்புழு அச்சு மாறியபொழுது குளவியாகாமல், ஒருதட்டாத்திப்பூச்சியாக மாறுதல் காண்கின்றோம்.

II. அக்கூண்டைத் திறந்து பார்க்கின் அதினுள் புழுவையன்றி அக்கூண்டின் மேற்புறத்தினின்று தொங்கிக் கொண்டிருக்கும் சில நூற்கள் காணப்படுகின்றன.

III. அக்கூண்டைச் சின்னாள் கழித்துத் திறப்பின், அதனுள் அடைக்கப்பட்ட புழுவையன்றி வேறொரு புழு காணப்படுகிறது. இவ்விரண்டில் அடைக்கப்பட்ட புழுவை, புதிதாய்க்காணுறும் புழு தின்று கொண்டிருக்கக் காணலாம்.

இம் மூன்று காட்சிகளினின்றும், அடைக்கப்பட்ட புழு குளவியாக்கப் படுவதில்லை யென்பது வெளிப்படை. எனினும், வேட்டுவனின் வாழ்நாளை ஆராய்ந்து மேற்காட்டிய முடிபின் உறுதி காட்டுவாம். இவ்வேட்டுவனைப்பற்றிப் பல மேனாட்டறிஞரும், நம் நாட்டறிஞரும் விரிந்த ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார்கள். அவைகளனைத்தையு மிங்கு விரித்தல் மிகையாகும். ஆதலின் சுருக்கிக் கூறுவாம்.

இவ்வேட்டுவன் ஆங்கிலத்தில் pot wasp எனப்படும். மற்று இயற்கை நூலில் Eumenes Conica எனப் படும். இவ்வேட்டுவனென்னும் குளவி ஒவ்வொரு தமிழரும், மிகவும் இலகுவில், இதற்கான எவ்விதத் தனி முயற்சியு மின்றித் தங்கள் இல்லங்களில் காணக் கூடிய தொன்றாகும். ஒவ்வொரு வீட்டிலும், சிறு வழகிய மண்கூடு, நிலைகள், கதவுகள், உத்திரங்களில் கட்டுவது இவ்வேட்டுவனே யாகும். ஒவ்வொரு மண்கூடும், ஜாடி போன்ற கழுத்துடன் புறம்பில் அழகிய பல வர்ணங்களால் மெழுகப்பட்டிருக்கும். பல மண்கூடுகள் கொண்ட ஒரு தொகையாயுள்ள இக்கூடுகளும் காண்ட லியல்பு. இக்குளவி, ஆறுகாலும் நான்கு சிறகுகளுமுடைய ஒரு சிறு பறவையாகும். ஆனால் இது பறவையினத்தைச் சேர்ந்ததன்று. பின் பூச்சிகள் (Insects) இனத்தைச் சேர்ந்ததாகும். இக்குளவியினுடல், கழுத்து, உடல், வயிறு என்ற மூன்று பாகங்கள் ஒட்ட வைத்தது போன்று தெளிவாய்க் காணுறும். இறகுகளும், கால்களும், நடுப்பாகமாகிய உடலில் அமைக்கப்பட்டும், கழுத்து பாகத்தில், இரண்டு கண்களும், புறமுணரும் இரண்டு கருவிகளும், உறுஞ்சி உணவு கொள்ளு மொருவாயும் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வேட்டுவனும் குளவி, கருக் கொண்டவுடன் ஒரு மண்கூடு மேற் காட்டிய வண்ணம் கட்டும். இக்கூட்டில் தன் முட்டை

யை இடுமுன், கானகம் சென்று, ஒரே
குலத்துதித்த ஒரே யளவுள்ள, பல
புழுக்களைக் கொண்டுவந்து கூண்டி
லடைக்கும். இவ்வேட்டுவன் புலா
லுண்ணு மினமாகையால், இதின்
புழுபுலாலுண்பதாகும். தான் கூண்டி
விடும் முட்டையினின்று வெளிவரும்
புழு உண்ணற்குப் புலாலுணவு வேண்
டும். இப்புலாலுணவிற்காகவே, காட்
டுப் புழுக்கள் கூண்டிலடைக்கப்படு
கின்றன. ஆனால் இனி முட்டையினின்
றும் வெளிவரும் புழுவைவிட, கூண்டி
லடைத்து வைக்கப்பட்ட புழுக்கள்
மிகவும் முதிர்ந்த வயதுடையவையாத
லால், மிக்க வல்லமையுடையனவாக
இருக்கும். ஆதலால் புதுப்புழு, பழய
புழுவைத்தின்பதற்கு முடியாதவொன்
ருகும். இவ்விடையூறை நீக்கவேண்டி,
காட்டினின்று கொண்டு வரும் புழுக்
களை, தாய்க்குளவி, கொன்று கூண்டி
லடைத்து வைப்பின், இறந்த புழுக்
களின் உடல்கள், முட்டையினின்றும்
புதிய புழு வருவதற்குள், அழுகியும்
நாற்றமடைந்தும் விடுமாதலால் உண
விற்குதவாப் பொருளாகும். ஆதலின்
உணவுப் பொருளாகக்கொண்டு வரும்
புழுக்களை வேட்டுவன், கொல்லாமல்
கூண்டி லடைக்க வேண்டியதுடன்,
அப்புழுக்களை ஆற்றலற்ற நிலையுள்
ளனவாய்ச் செய்து வைக்க வேண்டும்.
இவ்விரு இடையூறுகளை நீக்குதற்கும்,
தன் குறிப்பை நிறைவேற்றுவதற்
குமே, வேட்டுவன்; தான் காட்டி
னின்று கொண்டு வந்த புழுக்களைப்
பன்முறை கொத்திக் கூண்டிலடைக்
கும். இங்ஙனம் பன்முறை கொத்
துவதால், கொண்டு வரப்பட்ட புழுக்
கள், பச்ச வாதமுற்று, வலிமையற்
றவைகளாகி விடுகின்றன. இங்ஙனம்
அடைக்கப்பட்ட புழுக்கள் பச்சவாத
முற்று (Paralysis) வலியற்றிருப்பி
னும், அடைக்கப்பட்ட கூண்டில்
அடிக்கடி புரண்டு கொண்டிருப்ப
தியல்பு. வேட்டுவன் முட்டைகள்,
கூண்டின் கீழ்ப்பாங்கில் இடப்பட்
டிருப்பின், அடைக்கப்பட்டிருக்கும்
புழு புரளுவதால், முட்டைகள் நசுங்
கப்பட்டு உடைந்து போகும். இவ்
விடையூறினின்று நீக்குதற்கேவேட்டு
வன் பல நூற்கள் நூற்று, அவை
களின் ஒரு முனையைக் கூண்டின் மேற்
புறம் ஒட்டவைத்து மற்றொரு நுனி
யில் தன் முட்டையைத் தொங்க
விடும். அம்முட்டையினின்று புழு
பிறந்தவுடன், உயிருடனும், ஆற்றலற்
றும் கிடக்கும் புழுக்களைத் தின்று
வளரும். இங்ஙனம் நாளொரு மேனி
யும் பொழுதொரு வண்ணமுமாய்
வளர்ந்து தன் முழுப் புழு வுருவம்
அடைந்தவுடன், அப்புழு, உணவுப்
பொருள் கொள்ளுவதை நிறுத்துகின்
றது. உணவுப்பொருள் உண்பதை
நிறுத்தியவுடன், தான் மிகவும் சுறு
சுறுப்பாய் இங்குமங்கும் நடப்பதை
நிறுத்துகின்றது. பின் ஒரு விடத்தில்
அசைவற்று இருக்கின்றது. அந்நிலை
யில், தான் முன் வளர்ந்ததுபோலவே,
தன்னுடலைச் சுருக்குகின்றது. இங்ங
னம் ஒவ்வொரு நாளும் கொஞ்சம்
கொஞ்சமாய் ஒடுங்கிய பின், மேற்
கொண்டு ஒடுங்கா நிலையெய்துகின்
றது. அந்நிலையில், தன் மேற் புறத்
திலுள்ள புழு உருவத்தை (கால்கள்
தின்னும் வாய் கண் முதலியவைகளை),
துறக்கின்றது. எனவே அப்புழுவின்
உள் பொருள் மட்டும், ஒரு நீண்ட
முட்டை வடிவம் பெறுகின்றது. அம்
முட்டை உடலோடு கூடிய பண்டைய
புழுவிற்கு, உண்ண வாயில்லை, பார்க்
கக் கண்களில்லை, நடக்கக் கால்க



ளில்லை. இந்நிலையில், உணவற்று, பார்
வையற்று, நடையற்று, சின்னுள்கள்
கழிக்கின்றது. பின் பக்குவ நிலையடை
ந்தவுடன், அம்முட்டைவடிவம் வெடிக்
கவே, அதினின்றும் வேட்டுவனென்
னும் குளவி பிறக்கின்றது. அக்குளவி
பிறந்தவுடன், கூண்டினின்றும் வெளிக்
கிளம்ப முற்படுகின்றது. தன் ஆணவ
இயற்கை யுணர்ச்சியால், அக்கூண்டின்
பலபாகங்களையும் மோதி, கடைசியில்,
மெலினமாய்ப்பூசப்பட்டிருக்கும் கூண்
டின் வாயைத் திறந்துகொண்டு வெளி
வருகிறது. உடனே, தன் காத
லின்பத்தை நிறைவேற்ற, ஆண் அல்
லது பெண் குளவியைப்புணர்கின்றது.
அதன் பயனுய், கருக்கொண்ட பெண்
குளவி முன்போல் தன் வாழ்நாளை
நடத்துகின்றது. இக் குளவியைப்
பற்றி ஆங்கில பூச்சி வல்லுனரும்,
தற்சமயம் இந்திய அரசாங்கத்துக்கு
பூச்சியைப்பற்றி அறிவுகூறும் தலை
மையுடையவரு மானவர் கூறுவதா
வது :—

"Of this latter class the large long-waisted species of Eumenes are common visitors to almost every bungalow, building neat mud cells provided with a regular neck and lip, like a water jar............... .........The wasp hunts for and succeeds in capturing caterpillars (புழு) of the same species and size. .........The caterpillars are stung before they are placed in the cell and as a result they remain practically helpless, alive but incapable of co-ordinated motion. The wasp's egg is suspended from the top of the cell by a slender filament, so that it is less exposed to danger by any convulsive movements of the stored caterpillars; on hatching it devours these, still living, until they are eaten when it pupates in the cell and ultimately emerges." by T. Bainbrigge Fletcher, R. N., F. L. S., F. E. S., F. Z. S.

இச்சிறுவேட்டுவனின் வரலாற்ருல்,
வேட்டுவனிட்ட முட்டையினின்றும்
பிறந்த புழுவே ஒடுக்க நிலையுற்று
(Pupa stage) அதினின்றும் வேட்டு
வனுய்ப் பிறக்கிறதென்றும், தாய் வேட்
டுவனுல் கூண்டி லடைக்கப்பட்ட புழு
உணவுப் பொருளாவதன்றி வேட்டுவ
னுக மாறுகின்றதில்லை யென்றும்
கண்கூடாய்க் காண்கின்ருேம். இதி
னின்று நாம், " புழுவுக்கு அதுவிரும்
பியவடிவினைப் புழுவையெடுத்து வைத்
திருக்கும் அக்குளவி கொடுக்குமாறு
போல " என்ற விளக்க ஆசிரியர்
கருத்தை யாதரிக்கும் எக்குறிப்பும்
கண்டிலம். ஆதலின் விளக்க ஆசிரியர்
விளக்கம் இயற்கை நூல் காட்சியள
வை முடிபிற்கும் முரண் பட்டதென
வுணர்க. ஆனுல் இச்சிறு சரிதத்தின்
கருத்துக்கள், நம்மாசிரியர் வாக்கை
யும், உரையாசிரியர் கருத்தையும்
வழி நூலாசிரியர் விளக்கத்தையும் முற்
றிலும் தழுவி நிற்றல் காண்க. ஆத
லின் விளக்க வாசிரியர் திருவாளர்
பொ. முத்தைய பிள்ளையவர்கள்
கண்டவிளக்கம், நம் மாசிரியர் கருத்
துக்கும், உரையாசிரிய ருரைக்கும்,
வழி நூலாசிரியர் முடிபிற்கும் மிகவும்
முரண்பட்டதாகும். இனி இவ்வேட்டு
வனின் இயற்கை நூல் கண்ட சரித்
திர வுண்மையி னின்று, சைவ சித்
தாந்த முடிபுகளுடன், தொடர்புறக்
கண்ட உண்மை யாதேனு முளதோ
என்று ஐயுறும் சில ஆழ்ந்த சைவர்கள்
முன்னோர் கண்ட வுரைக்குமாறு காண்
டல் முறையற்றதுடன் கொள்ளத்
தக்கதன்றென்றும் கூறுவாராதலின்,
அன்னர் ஐயங்களை நீக்குவான்வேண்டி
இவ்வேட்டுவனின் சரிதத்தைச் சைவ
நூல் முடிபுகொண்டு ஆராய்ந்து இரண்
டிற்குமுள்ள தொடரை அடுத்த கட்
டுரையில் விளக்குவன்.



187138.

# விபரீதவுரைத் தேற்றம்

[கணபதிப்பிள்ளை, சிதம்பரம்]

‘நூல்போன சங்கிலி’ என்ற கட்டுரையில் “தருமகட் பேசினேன்” என்னும் பாட்டுக்குப் பொருள் காணுஞ் சித்தாந்த சைவக் கண்ணில்லாத சித்தாந்தப் போதகாசிரியர் “நூல்போதல்”, “உலக நகும்வழக்”கென்ற விரண்டற்கும், முறையே அருள்வழிச் சேறல், உறுதிமொழி மீறிச் சேறலென்பன பொருளாம், ஆகவே அருளுக்காளாக வேண்டுமென்பதே, இதனாற் கூறப்பட்ட பொருளென விபரீதம் படவுரைத்து, அத்துணையி னமையாது அதற்குரையுரைத்த தம்பிரானும் வேறொருவரு மாகிய அவ்விருவருளொருவர் மாறுபாடறியாதார்ஒருவர் புரட்டரென்றனர். மாறுபாடும் புரட்டு மறிந்த இச் சித்தாந்த போதகாசிரியர் போதிக்கும் போதனை விபரீதம், ஸ்தாலீபுலாக நியாயம்பற்றிக் காட்டுதும்.

இவர் தமது சர்வஞானோத்தர விபரீத வியாக்கியானத்தில் “முத்தியினு மூன்று”மென்ற சித்தாந்தம் போதிப்புழி இத்தை விளைவித்தல் மலமென்பதற்கு இத்தை விளைவித்த லின்மை மலமென சித்தாந்தஞ் செய்து “அல்லலருளாள்வார்க்கில்லை” யென்புழி வரும், ஞாலங்கரி யென்பது ஞாலமின்மை கரியெனப் பொருள்படுதல், அதற்கு மேற்கோளென்று சான்று காட்டிச் சித்தாந்தஞ் செய்தனர்.

“இத்தை விளைவித்தல்” மலமென்பத னியல்பெடுத்து விடுக்கும் பாடியமுடையாரும், ஞாலங்கரி யென்பதற்கு ஞாலத்து வாழ்வார் சான்றென்றுரைத்த ஆசிரியர் பரிமேலழகரும், இவர் சித்தாந்தப் பொருள் காணுங் கண்ணின்றி, புரட்டியும் மாறியுங் கூறினர். இதனானே இவர் போதிக்குஞ் சித்தாந்தம், மாயாவாத சித்தாந்தமாதல் காண்க. விளைவித்தல் மலமென்பது விளைவித்தலின்மை மலமெனத் தாங்கூறுமதற்கு, ஞாலமின்மை கரியென்று அவர்காட்டுஞ் சான்றே, ஞாலத்து வாழ்வார் சான்றென்றது பற்றி, அவரது ஞாலமின்மைச் சான்றை, துர்ச்சான்றாகலின் அது விபரீதத்தினும் விபரீதமாதலெவ்வாறோ அவ்வாறே நூல்போனவென்பதற்கும் உலகம்நகும் வழக்கென்பதற்கும் அவரோதுவன விபரீதமாத லறிக.

இவ்வாறே இவரது சர்வ ஞானோத்தரம், சிவஞானபோதம், சிவஞானசித்திகளின் வியாக்கியான விபரீத மெல்லாம் மாயாவாத சித்தாந்த மாதல் மெய்கண்ட பாடியத்துட் காண்க.

இனி இரண்டாவதுரைகாரர், தான் கொள்ளும் பாடத்திற்குச் சான்று காட்டவேண்டு மென்றதை மறந்தனரென்றார் என்ற போதகாசிரியர், நூல்போனவென்பதற்கு அருள் வழிச் சேறலென் றுரைத்ததற்குத் தாங் காட்டியசான்று அல்லது அவர் தம்மேற்கோளென்னை கொல்லோ? “ஏதிலார் குற்றம்போற் றங் குற்றங் காண்கிற்பிற், றீதுண்டோ மன்னுமுயிர்க்” கென்னு மிலக்கணத்திற் கிவரிலக்கிய மாதல் காண்க.

“இனி நூல்போன வென்பதற்கும், நகும் வழக்கென்பதற்கு மிவ்வுரைகாரரை மறுத்துரைப்பார் கூற்றுப் பொருந்துமாயினும், ஆசிரியர் கருத்தோடு முலக வழக்கோடும் பொருந்து மென்று துணிந்து சொல்வதற் கில்லை.” யென்றார். கருத்தோடும் வழக்கோடும் பொருந்தாததாய மறுத்துரைப்பார் கூற்று, பொருந்துமாயினு மென்றுமப்பொருந்தல் “ஆசிரியர்கருத்தோடும் வழக்கோடும் பொருந்தல் துணிந்து சொல்லுதற்கில்லை” யெனவே இப்போதகாசிரியர் கருத்தோடு மிவர் வழக்கோடும் பொருந்து மென்று



துணியாது சொல்லுதற்குண்டேயன்றோ? ஆகலினது விபரீதமாத லறிக. என்னை? மறுத்துரைப்பார் கூற்றுப் பொருந்துத லெதனோடெனக் கடாயினார்க்கு விடையின்மையானென்பது. அன்ன பிறவு மன்ன.

அருளாலவ் வியனுலக நகும் வழக்கே நன்மை யாப்புணர்ந்தா னென்பது கூறுதற்கு முன்னர்க் கூறப்பட்ட கலியாணத்தை யனுவதித்தார். தருமகட் பேசினேனென்பது முதல், பாதம் பணிந்தென்பது வரை யனுவாதம். அருளாலவ்வியனுலகம் நகும் வழக்கே நன்மையாப் புணர்ந்தானென்பது மாத்திரமே பிறிதில்லை. உலகம் நகும் வழக்காவது தாங் கூறிய உறுதிமொழியை மீறித் திருவாரூருக்குச் செல்ல நினைந்தமையுங் கண் கெட்டமையுமாம். நன்மையாய்க் கொள்ளுதலாவது கண் கெட்ட பின்னரும், பழிக்கஞ்சித் திருவொற்றியூரில் வசித்துக் கண்பெற வெண்ணாமல் திருவாரூரை நோக்கிச் செல்லலென்றார். எனவே கலியாணத்தையநுவதியாக்கால் நகும் வழக்கு நன்மை யாதல் கூறமுடியாதென்கிறார். ஆசிரியர் சேக்கிழார் இவர் கூறு முறுதிமொழி மீறிச்சேறல் கண்கெட்டமைகள் கூறுங்கால், இவர் கலியாணத்தை யநுவதியாது கூறுதலின் இவரதநுவாத விலக்கணம் அவ்வியாத்தி யாகலின் அது மாயாவாத வநுவாத மாதலறிக.

அன்றியும், உலக நகும் வழக்காகிய வுறுதி மொழியை மீறிச் செல்லுமுறையை நன்மையாகக் கொண்டாரென்று ஆண்டு மீறிச் சேறலொன்றே நகும் வழக்கென்றவர், ஈண்டு உறுதிமொழிச் சேறலோடு, கண்கெடலொன்றுங் கூட்டி அஃதிரண் டென்றல் விபரீதமாதன் மேலும் மீறிச் சேறல் கண்கெடலாகிய நகும் வழக்கு வேறு கண் கெட்ட பின்னரு மப்பழிக்கஞ்சி யங்கு வசிக்காது செல்லலாகிய நன்மை வேறென்பதும் விபரீதமாத லறிக.

உலகம் நகும் வழக்காவது செல்ல நினைந்தமையென்றார். அது, “செல்ல”லென்றதனோடு மாறுபடுதலின் விபரீதமாதலறிக. இவர் விபரீத மெல்லாந் தனித்தனி விரிப்பிற் பெருகும். ஆகலினுரைத்தவாறுபற்றி யோர்ந்துணர்ந்து கொள்க.

“மகட் கேட்டு முடிவு செய்யப்பட்டு விட்டால் கலியாணமாகா விட்டாலுங் கேட்டவ னிறந்தால் பெண் விதவையாதல் பொருந்தும். அன்றி மகட்கேட்டவன் கலியாணமாகாமலிறந்தால் பெண் வைதவ்வியமாதலெவ்வாறு பொருந்து” மென்கின்றார். எனவே கேட்ட லுண்மை கலியாணமாதலின்மையென்றவிரண்டும், இரண்டற்கும் பொதுவாகலின் இரண்டுந் தம்முளொக்கு மென்பது அவர்க்குடம்பாடாம். ஆகவே கேட்டலுண்மை கலியாண மாதலின்மை யிரண்டுமுடைய கேட்டவனிறந்தால் பெண் விதவையாதலும் அவர்க்குடம் பாடாவதன்றி மறுக்கப்படுவ தன்றென்றொழிக.

இது காறுங் கூறு மாற்றால் நூல்போன வென்பதற்கு அருள் வழிச் சேற லென்பது செம் பொருள் இலக்கணப் பொருள் குறிப்புப் பொருள் அல்லது முக்கியப் பொருள் கவுணப் பொருள் தாற்பரியப் பொருளென்பவற்றுள் ஒரு பொருளுமன்மை யினிது துணிதலின், நூலிழத்த லென்பதே பொருந்தும். ஆயினும் மேல் நூல் தரிக்கப் படினன்றோ அஃதிழத்தலென்பது செல்லும் நூல் தரிக்கப் படாமையின் நூலிழத்த லென்பது செல்லாதா லெனின்.

அற்றேல் நின்னை யீண் டொன்று வினவுதும். வினவுமாறு திலகவதியம்மையார் நூல் தரியா ராயினும் நூலிழந்தா ரெனப்படுதல், நினக்கு மொக்குமன்றே இதுவு மதுவாம். ஆகலின் செல்லாமை யாங்ஙன மென்றொழிக.

அஃதேல் இஃதஃதாம். ஆயினும் அது மகட்கேட் டிசையப் படுதலிற்

செல்லும். இஃதஃதன்றிக் கேட்டன் மாத்திரையே யாகலின் செல்லாதா லெனின், அற்றன்று. நூல்தரியாமை அவ்விருவர்க்கு மொக்கும். ஒக்கவே அவருள் திலகவதியம்மையார் நூலிழந்தா ரெனப்பட சங்கிலிதேவியார் நூலிழந்தா ரெனப்படாமைக் கேது வேறியாது மின்மையின், செல்லாமை யாங்ஙனமென் றொழிக.

அற்றேல் இது மற்றொன்று விரித்தலாய் முடியுமெனின் அற்றன்றென்பதனை யுவமையொடு படுத்துக் காட்டுதும். பாந்தள் கண்டு கடியச்சென்ற தேவதத்தன் அதன் வாய்ப்பட் டிறந்தான். காணாது சென்ற தருமதத்தன் மறைந்துறை பாந்தள் வாய்ப்பட்டிறந்தானெனின் அவரிருவரு மிறத்தற்கேது பாந்தள்வாய்ப் படுதலேயன்றிக் கண்டானிறக்க, காணாதா னிறவாதானல்லன். ஆகலின் தேவதத்த னிறத்தற்குக் காண்டலேது வன்மை யெவ்வாறோ அவ்வாறே திலகவதியம்மையார் நூலிழத்தற்கு இசையப் படுதலேது வன்மை யறிக. என்னை! திலகவதியம்மையார்எதனால்நூலிழந்தாரெனக்கடாயினார்க்கு இசையப் படுதலா விழந்தா ரென்பது விடையன்று. மற்று மகட் கேட்டா னிறத்தலா லென்பது விடையாமாகலின். இந்நயம்பற்றி சங்கிலி தேவியார் நூலிழத்தற்கேது கேட்டவ னிறத்தலா லென்ப தெவ்வாறோ, அவ்வாறே திலகவதியம்மையார் நூலிழத்தற்கேது கேட்டவ னிறத்தலன்றி யிசைத லன்மையின் மற்றொன்று விரித்தலன்றென்றொழிக.

இனி இசைந்து கலியாணமாகுமுன் கேட்டவ னிறந்தால் விதவையாதல் பொருந்து மென்றார். என்றிவர் கூறிய வாறே இசைந்ததோ ரிசைவுடையாள், ஓரேதுப் பற்றிக் கலியாணமாகாமல் பிறிதோர் மணமகளை மணந்து முன் னிசைந்தவளைக் கேட்டவ னிறந்தால் அவ்விசைந்தவள் நூலிழந்தா ளெனப்படாமையின் அது பொருந்துமா றியாங்ஙன மென்றொழிக.

பிறிதோராற்றானு மதுவிடுக்குதும். திலகவதியம்மையார் நூலிழந்தாரென்பது, எதுபற்றியெனக்கடாயினார்க்குக் கேட்டா னிறத்தல்பற்றி யென விடுப்பின், இந்நயம்பற்றி யிதுவுமதுவாம். என்னை, கேட்டானிறத்த லிருவர்க்கும் பொதுவா மாகலின். ஆகவே நூல்தரியாராயினும் நூலிழத்த லிருவர்க்கும் பொதுவாம். ஆகலின் திலகவதியம்மையார், நூலிழந்தா ரெனப்படுத லெவ்வாறோ அவ்வாறே சங்கிலிதேவியார் நூலிழத்த லெல்லார்க்கு மொக்கு மென்னு மிதுபற்றியும் அஃதற்றே யாதல் தெற்றென வறிக.

அவ்வாறே திலகவதி யம்மையார் நூலிழந்தா ரெனப்படின் (அம்பொன் மணி நூல் தாங்காதனைத் துயிர்க்கு மருடாங்கி திலகவதியாரிருந்தா) ரென்பது பற்றி அநுவேத விலக்கன்றுபோலு மெனின், அற்றன்று. தூலமுறைப்பற்றி நூல் தாங்கியிழத்தல் காணப்படாமையின், மறித்துமது தாங்கினரோ வன்றோ வென்று தோன்றுமையமறுத் தருளுவார் நாறாங்காதென் றுபதேசித் தருளுமத் துணையே, பிறிதன்றென்றொழிக.

அஃதேல் அங்கி தொடில் சுடும்; தொடாக்கால் சுடாது. அதுபோல் நூலிழந்தாளைக் கூடல் பாவம், இழவாதாளைக் கூடல் பாவமாகாதா லெனின் அற்றன்று. ஏதுக்கள்பற்றி சங்கிலி தேவியார் நூலிழந்தாளாதல் மேற்சாதித் தொழிதலின் அவளை மணம் புணர்தல் வேதவிலக்காதல் வேறு கூற வேண்டாமையின் அது தானே போதருமென்பது.

இத்துணையு முரைத்த வாற்றால் நூல்போன வென்பதற்கு அவர்கூறும் பொருள் விபரீதமாதல் ஏது முகத்தா லினிது சாதித்தாம்.

### சுக்கில௵ மார்கழிமீ ௮ (22-12-1929) ஞாயிற்றுக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை | 8 —11 | மகாநாட்டு விஷயாலோசனைக் கூட்டம். |
| பகல் | 1 — 1-15 | தேவாரம், கடவுள் வணக்கம், தலைவர் நியமனம், தலைவர் வரவேற்பு, ஆண்டு அறிக்கைப் பத்திரம் வாசித்தல். |
| ,, | 1-15— 2-15 | தலைவர் பேருரை. |
| ,, | 2-15— 3 | திரு. கி. குப்புச்சாமி முதலியார், இராணி மேரியார் கல்லூரி தனித் தமிழ்ப் புலவர், சென்னை. "சென்றடையாத திருவுடையான்" |
| ,, | 3 — 3-45 | திரு. ராம. கு. ராம. இராமசாமி செட்டியார், "சிவநேசன்" பத்திராசிரியர், பலவான்குடி. "திருவருட் செல்வம்" |
| மாலை | 3-45— 4-30 | திரு. E. N. தணிகாசல முதலியார், பி. ஏ., பி. எல்., அட்வகேட், சென்னை. "தேவாரம் கற்க வேண்டிய வயது" |
| ,, | 4-30— 5-15 | திரு. அ. மு. சரவண முதலியார், தமிழ்ப் புலவர், போர்டு ஹைஸ்கூல், லால்குடி. "அரசும் கன்றும்" |
| ,, | 5-15— 6 | திரு. E. T. இராஜேஸ்வரி அம்மாள். பி. ஏ., சென்னை. "இயற்கைத் தத்துவ நூலும் சைவ சமயமும்" |
| ,, | 6 — 6-45 | திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி., டிப்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ், தஞ்சாவூர். "பிற சமயிகளிடமிருந்து சைவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியவை" |
| ,, | 6-45— 7-30 | திரு. அ. முத்தைய பிள்ளை, பி. ஏ., வழக்கறிஞர், பாளையங்கோட்டை. "சிவஞான போதமும் திருக்குறளும்" |
| ,, | 7-30 | தலைவர் கருத்துரை, தேவாரம், கடவுள் வாழ்த்து. |

---

### சுக்கில௵ மார்கழிமீ ௯ (23-12-1929) திங்கட்கிழமை

| | | |
|---|---|---|
| காலை | 8 —11 | சைவர் மகாநாடு—தீர்மானங்கள். |
| பகல் | 1 — 1-30 | தேவாரம், கடவுள் வணக்கம், தலைவர் முன்னுரை. |
| ,, | 1-30— 2-15 | திரு. பலாசூர் - பண்டித இராமநாத சாஸ்திரியார், அடையாறு லைப்ரெரி பணியாளர், சென்னை. "சைவ உபநிடதங்கள்" |
| ,, | 2-15— 3 | திரு. C. S. இராஜா பிள்ளை, தமிழ்ப் புலவர், வூர்ஹீஸ் கல்லூரி, வேலூர். "சேரன் செங்குட்டுவன்" |
| ,, | 3 — 3-45 | திரு. வை. கந்தசாமி முதலியார், தமிழ்ப் புலவர், திருப்பாதிரிப்புலியூர். "சிவன் செயலும், சீவன் செயலும்" |
| மாலை | 3-45— 4-30 | திரு. C. S. சுவாமிநாத முதலியார், B. A., செக்ரெடரி, ரிலிஜியஸ் எண்டோமெண்டு போர்டு, ("The need of the hour") "இத்தருவாயின் தேவை" |
| ,, | 4-30— 5-15 | திரு. க. சிவகுருநாத பிள்ளை, சைவ போதகாசிரியர், தூத்துக்குடி. "சைவத் தனியரசு" |
| ,, | 5-15— 6 | திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ., மாஜி தாசில்தார், சிந்துபூந்துறை, திருநெல்வேலி. "சைவ சமய உண்மைகள் தற்காலத்தில் மக்கள் முன்னேற்றத்துக்கு எத்துணைப் பொருத்தமா யுள்ளன" |
| ,, | 6 — 6-45 | திரு. கே. ஆறுமுகம் பிள்ளை, திருநெறித் தொண்டர் குழாம், நாகர் கோவில். "அடியவரும் சமயப் பணியும்" |
| ,, | 6-45 | தலைவர் கருத்துரை, தேவாரம், கடவுள் வாழ்த்து. |

சுக்கில௵ மார்கழி௴ ௯௳ (24-12-1929) செவ்வாய்க்கிழமை

| | | |
|---|---|---|
| காலை | 8 —11 | சைவர் மகாநாடு—தீர்மானங்கள். |
| பகல் | 1 — 1-30 | தேவாரம், கடவுள் வணக்கம், தலைவர் முன்னுரை. |
| ,, | 1-30— 2 | சமாஜ உத்தியோகஸ்தர்கள் தேர்தல், காரியக் கூட்டம். |
| ,, | 2 — 2-45 | திரு. கா. வேதாசல முதலியார், சைவ போதகாசிரியர், காவித் தண்டலம். "வன்றொண்டப் பிரபாவம்" |
| ,, | 2-45— 3-30 | திரு. வே. நாராயண ஐயர், எம். ஏ., எம். எல்., அட்வகேட் சென்னை. "சமயங்களின் ஒற்றுமைப் பகுதிகள்" |
| மாலை | 3-30— 4-15 | திரு. K. வஜ்ரவேல் முதலியார், பி. ஏ., காஞ்சிபுரம். "மெய் கண்ட தேவர்" |
| ,, | 4-15— 5 | திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார், தலைமைத் தமிழ்ப் புலவர், ஈபர் கல்லூரி, திரிசிராப்பள்ளி. "சொல்லும் பொருளும்" |
| ,, | 5 — 5-45 | திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்., தமிழகராதிப் பதிப்பாசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம். "சைவமும் தமிழும்" |
| ,, | 5-45— 6-30 | திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை, எம். ஏ., எம். எல்., தலைமைத் தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம். "தொல்காப்பியமும், பழந்தமிழர் கடவுட் கோட்பாடும்" |
| ,, | 6-30— 7-15 | திரு. அ. கந்தசாமிப்பிள்ளை, தமிழ்ப் புலவர், அரசாங்கக் கல்லூரி, கும்பகோணம். "இயற்பகையார்" |
| ,, | 7-15 | தலைவர்முடிவுரை, வந்தனோபசாரம், தேவாரம், கடவுள்வாழ்த்து. |

---

**குறிப்புகள் :—** திருவெண்ணெய் நல்லூருக்கு வருகிறவர்கள் இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் வண்டியில் வருவதுதான் சௌகரியம். ஸ்டேஷனிலிருந்து ஊருக்குப் போக வண்டிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சொற்பொழிவுகட்கு எல்லாச் சைவர்களும் வரலாம். விஷயாலோசனைக் கூட்டம், மகாநாட்டுத் தீர்மானங்கள் நிறைவேறும் கூட்டம் இவைகட்கு வாக்குரிமைச்சீட்டு பெற்ற சைவ சபைப் பிரதிநிதிகள் மட்டுமே வரலாம். சமாஜக் காரியக்கூட்டம், உத்தியோகஸ்தர்கள் தேர்தல் இவைகட்கு சமாஜ அங்கத்தினர் தாம் வரலாம். பெண்களுக்குத் தனியிடம் அமைக்கப்பட்டிருக்கிறது. சொற்பொழிவாளர்கட்கும், சைவ சபைப் பிரதிநிதிகட்கும் தங்குமிடம், உணவு வசதி முதலிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சைவ சபைப் பிரதிநிதிகள் 1926௵ டிசம்பர்௴ 25, 26-ம் தேதிகளில் திருவாவடுதுறை முதலிய சைவ மடங்கட்குச் செல்வார்கள். தேவாரம் முதலிய பன்னிரு திருமுறைகளைக் குறைந்த விலைக்கு ஆயிரக் கணக்காக அச்சிட்டு வெளியிடுவதற்காக இவ்வறிக்கையைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் இயன்ற பொருளுதவி புரிய வேண்டுகிறோம்.

"கோதில் சைவக் குலமிக வாழியே"

திருச்சிற்றம்பலம்

---

## சைவ சித்தாந்த சபை, தூத்துக்குடி

இச்சபையின் 46-ம் ஆண்டு நிறைவு விழா நிகழும் மெய்கண்டான் யாண்டு ௭௦௭ சுக்கில ஆண்டு மார்கழித் திங்கள் ௧௪, ௧௫ (1929 டிசம்பர் 28, 29)-ம் நாட்களில் நடைபெறும். அவ்விழாவின் பேரவைக்குச் சென்னை, உயர்தர நீதிமன்ற வழக்கறிஞரும், சைவ சித்தாந்த மகா சமாஜ கௌரவ அமைச்சரும், சித்தாந்த மென்னும் சீரிய பத்திரிகையின் ஆசிரியருமான உயர்திரு ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B.A., B.L. அவர்கள் தலைமை பூணுதற்கு அன்புடன் இசைந்திருக்கிறார்கள். மதிநுட்பம் நூலோடுடைய அறிஞர் பலர் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். விபரமான நிகழ்ச்சிக் குறிப்பு அமைச்சரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தூத்துக்குடி,<br>28-11-29.

ச. முத்துக்குமாரசாமி பிள்ளை,<br>வரவேற்புக் கழகத் தலைவர்.

---

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.